சந்தா விகிதம்:
1 வருடம் :: ரூபா 6-00
6 மாதம் :: ,, 3-50
தனிப்பிரதி சதம் 10
ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
முற்பணமின்றிப் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது


# ஈழகேசரி


தேசீய வார வெளியீடு



எங்களிடம்
சகலவிதமான
சினிமாப் பாட்டுப் புத்தகங்களும்
படங்களும்
கிடைக்கும்
த. தம்பித்துரை
பத்திரிகை ஏஜன்ட், கச்சேரியடி
கிளை: 33, பெரியகடை, யாழ்ப்பாணம்



தொகுதி—14 } யாழ்ப்பாணம், சுன்னுகம்: சுபானு பங்குனி ௨௦ (2-4-44) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—36


### யுத்தம் நடக்கின்றது:

## செஞ்சேனையின் முன்னேற்றம்

ருஷியர் அதிசயிக்கத்தக்க வழியில் முன்னேறிச் செல்கின்றனர். ஒவ்வொரு நாளும் புதுப்புது நகரங்கள் ருஷியர் வசமாகின்றன. முதலாவது உக்ரேனியப் படை புறாத் நதியைக் கடந்துவிட்டது. சேர்னேற்றி, ஹங்கேரி ருமேனிய எல்லைகளில் உள்ள ஜெர்மனியரின் சிறந்த அரணுகும்.

தளபதி ஷுகோவின் படைகள் உக்ரைனின் எல்லையைத்தாண்டி கார்ப்போதியன் மலையடிவாரத்தில் மிகுந்த வேகத்தில் பாய்ந்து செல்கின்றன. இப்பொழுது அவை ஸ்ரானிஸ்லாவவ் என்ற இடத்தைக்கிட்டிவிட்டன.

நீஸ்ரர் நதிக்கு வடக்கே ஷுகோவின் படைகளும், கோனிவ்வின் படைகளும் ஜெர்மனியர் தப்பிச் செல்லாதவாறு நதிக்கரையை வளைத்துக்கொண்டனர். எல்லா அரங்கங்களிலும் ஜெர்மனியர் சுருட்டி உருட்டப்பட்டு வருகின்றனர். ஒரு நாள் யுத்தத்தில் மாத்திரம் 900 ஜெர்மன் கவசப்படைகள் கைப்பற்றப்பட்டனவாம்.

●

### இத்தாலியில்.........

### நேசப்படைகள் சிறிது பின்வாங்கின

கசினோ அரங்கத்தில் மொன்ரெ கசினோவில் தாக்குதலை நடத்திய நியூசிலந்து, கூர்க்கப் படைகள் சிரமத்தோடு கைப்பற்றிய இடங்களிலிருந்து திரும்ப அழைக்கப்பட்டதாக உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகின்றது. முன்னேறிய படைகள் இரண்டு முனைகளிலும் ஊறு படக் கூடிய நிலைமையில் இருந்தபடியாலும், அவற்றோடு ஆகாயத் தொடர்பொழிய வேறு தொடர்பு ஏற்படுத்த முடியாமையினாலுமே அவை திரும்ப அழைக்கப்பட்டனவாம்.

பொதுவாக இவ்வரங்கத்தில் போர் சிறிது தளர்ச்சியடைந்துவிட்டதெனக் கூறலாம். காவற்படைச் சண்டைகளும், பீரங்கிப் பிரயோகமுமே இடைக்கிடை நடைபெறுகின்றன.

அன்ஷியோ பால முனையில் ஜெர்மனியர் நடத்திய சிறு தாக்குதல் முறியடிக்கப்பட்டது. துறைமுகப் பகுதியைத் தாக்கிய 25 ஜெர்மன் விமானங்களில் 4 சுட்டு வீழ்த்தப்பட்டன. அன்ஷியோ பால முனையில் நேசப் படைகள் பெரிய தாக்குதலைத் தொடங்குவார்கள் என ஜெர்மனியர் எதிர்பார்க்கின்றனர். எனவே பல் முனைகளில், விசேஷமாக இடது பாகத்தில் பல சிறு தாக்குதலை நடத்தினார்கள். நேச விமானப் படைகள் ஜெர்மன் அரண்களைத் தாக்கியவண்ணமிருக்கின்றன.

●

### கசினோவில் நடந்த போர்

### நேசப்படையின் பலப்பரீட்சையல்ல

"கசினோவில் நேசப்படைகள் நடத்திய தாக்குதல்கள் நாம் விரும்பிய இலக்கை அடையாமலே நின்றுவிட்டன. ஜெர்மனியரே நமது முன்னேற்றத்தைத் தடுத்தனர் என்பது ஒரு காரணம். ஆனல் இத்தாலியில் நாம் ஈட்டிய வெற்றிகள் எமக்கு மேலும் வெற்றிகளை ஈட்டித்தரும். இச்சண்டை ஒரு வகையிலும் நேசப் படைகளின் பலத்தைப் பரீட்சிப்பதாகாது. அத்துடன் நாம் எமது பலத்தின் முக்கிய பகுதியை அங்கே செலுத்தவில்லை. போரின் முடிவு இன்னும் நெருங்கவில்லை. கசினோவில் நாம் அதிக விஷயங்களைக் கற்றுக் கொள்ளாவிட்டாற்றான், நாம் நஷ்டம் அடைந்தவர்களாவோம். நாம் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டதுடன் நடைமுறையிலும் கையாண்டுவருகின்றோம்," என அமெரிக்க போர்க் காரியதரிசி பத்திரிகை மகாநாட்டிற் கூறினர்.

●

### இந்திய அரங்கம்.........

### இம்பால் ரிடிம் வீதியைத் துண்டிக்க எதிரியின் முயற்சி

இம்பால் ரிடிம் வீதியில் எதிரியின் பல தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன. ஆனல் வடக்கே யப்பானியரின் சிறுபடைகள் இம்பால் ரிடிம் வீதியைத் துண்டிக்க முயற்சிக்கின்றனர். வடபர்மாவில் பல எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

மோங்டோவில் காவற்படைச் சண்டைகள் நடைபெற்றன. புதிடோங்கில் யப்பானியர் நமது படை வரிசைகளைத் தாக்கினர். ஆனல் அதிக சேதத்தோடு விரட்டப்பட்டுவிட்டனர். தாமு—பலேவல் வீதியில் நமது படைகள் யப்பானியரின் தாக்குதலைச் சமாளித்துக்கொண்டன.

மணிப்பூரில் யப்பானியர் பாதுகாப்பு யுத்தஞ் செய்கின்றனராம். காயமடைந்த புலியைப் போன்று யப்பானியர் அதி தீவிரமாகத் தாக்கினர். ஆனலும் முறியடிக்கப்பட்டுவிட்டனராம்.

உக்றுல் பகுதியில் யப்பானியரின் தாக்குதல் அதிகமாகிவருகின்றது. இம்பாலைத் துண்டிப்பதற்கு யப்பானியரின் முயற்சி ஏற்றவகையில் எதிர்க்கப்பட்டுவருகின்றது. பர்மாவில் யப்பானியரின் விமானப்படைகள் அழிக்கப்பட்டுவருகின்றன. நமது விமானப்படைகள் பல இடங்களைத் தாக்கி வருகின்றன.

---

### யாழ்ப்பாணம்-மலையாளம் புகையிலை ஐக்கிய வியாபாரச சங்கம்

#### கொள்வனவு விலை விபரம்

இவ்வருடம் ஆனி மாதம் 21ந் தேதி புதன்கிழமை தொடக்கம் ஷை சங்கம், மலையாளம் புகையிலையைக், காலநிலைமையை அநுசரித்து ஏனைய வருடங்களையும் விட, மிகவும் கூடுதலான விலையில் அங்கத்தவர்களிடமிருந்து கொள்வனவு செய்யத் தீர்மானித்திருக்கின்றது.

விலைவிபரம் வருமாறு:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தினிசு | 1 — | ரூ. 1-00 | தினிசு | 7 — | ச. 80 |
| ,, | 2 — | ச. 95 | ,, | 8 — | ,, 75 |
| ,, | 3 — | ,, 90 | ,, | 9 — | ,, 70 |
| ,, | 4 — | ,, 87 | ,, | 10 — | ,, 65 |
| ,, | 5&6 — | ,, 85 | ,, | 11 — | ,, 55 |

இன்னும், 1941-ம் ஆண்டுப் புகையிலை விற்பனையால் இதுகாலவரையும் எதிர்பாராத கூடுதலான லாபப்பணம் கிடைக்குமெனவும், 1942-ம் ஆண்டுப் புகையிலை முதல் வருடத்திலும்பார்க்கக் கூடுதலான லாபத்தைக் கொடுக்குமெனவும் சங்கந் தெரிவிக்கிறது. ஆனல், இவ்வருடம் அங்கத்தவர்கள் சங்கத்திற்குப் புகையிலை கொடுக்காதிருந்தால், திருவாங்கூரிலுள்ள சங்கத்தின்விற்பனைச்சந்தையை யாழ்ப்பாணத்தவர் இழக்கநேரிடும். இதனல் [illegible] புகையிலையை அடுத்த ஆண்டுகளில் விற்பனை செய்வது முற்றாக நின்றுவிடக்கூடும்.

---

## யாழ்ப்பாணத்தில் மந்திரிமார்

### பட்டினசபை அங்கத்தினருடன் ஆலோசனை

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் 'இலங்கை மந்திரி'மாரில் இருவர் தலைகாட்டியிருக்கின்றனர். ஒருவர் திரு. மகாதேவா. மற்றவர் திரு. பண்டாரநாயகா. இவர்களுக்குத் துணையாக ஸ்தலஸ்தாபனத் தலைவரும் அள்ளுப்பட்டு வந்தார். அனைவரும் யாழ்ப்பாணத்தில் நின்றார்கள்; அங்குமிங்கும் ஓடித்திரிந்தார்கள். யாழ்ப்பாணத்து வீதிகளையும் சேரிகளையும் போய்ப் பார்த்தார்கள். பின்னர் கொழும்புக்குக்'கோச்'சில் 'பாஸாகிவிட்டார்கள்'

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணப் பட்டினசபைத் தலைவரும், அங்கத்தவர்களும் ஸ்தலஸ்தாபன மந்திரியையும், உள்நாட்டு மந்திரியையும் நிர்வாக சபைகூடும் அறையிற் கண்டு பேசினர். ஸ்தலஸ்தாபனத் தலைவர் E. W. கன்னங்கராவும் அங்கு சமுகமளித்திருந்தார்.

இன்று நிலவும் யாப்பாணப் பட்டினசபை ஒருவித தொந்தரவுகளும் இல்லாமல் அமைதியாக உழைக்கின்றதென்றும், அங்கத்தினர் அனைவரும் ஒரு குடும்பத்துப் பிள்ளைகள்போல எவ்வித பிரிவினைகளு மில்லாமல் நடந்துகொள்ளுகின்றார்களெனவும்தலைவர் C. பொன்னம்பலம் மந்திரியிடம் இனிமையாகப் பேசியிருக்கின்றார்.

நகரசபைத் தொழிலாளர்களுக்கு யுத்த கால உபகாரச் சம்பளம் உயர்த்தப்படவேண்டுமெனத் தலைவர் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் அச்செலவு அனைத்துக்கும் மத்திய அரசாங்கம் பண உதவி செய்தல் மிக அவசியமென அவர் மந்திரியைக் கேட்டுக்கொண்டார்.

### மந்திரி சொன்ன கதை

ஒவ்வொரு சபையின் கோரிக்கைகளையுந் தனிந்தனியாகப் பரிசீலனை செய்வதால் பல சிக்கல்கள் உண்டாகிவிடுமென மந்திரி தெரிவித்தார். மேலும் அடுத்த வருடச் சொத்து வரி உயர்த்தப்படவேண்டுமென்றும் இல்லாவிடில் யுத்தகாலச் சம்பளத்தொகையில் பாதிப்பங்கை மத்திய அரசாங்கங் கொடுக்கமாட்டாதென்றும் திரு. பண்டாரநாயக்கா கூறினர்.

### தண்ணீர் வசதி

யாழ்ப்பாணத்துக்குத் தண்ணீர் வசதி வேண்டுமென வருடக் கணக்காகக் கிளர்ச்சி செய்து 1939-ம் ஆண்டில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அத் திட்டத்தின்படி ரூபா-10,000 வேண்டியிருந்தது நிலங்கள் வாங்குவதற்காக. இதிற் பாதித் தொகையை மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டுமெனத் தலைவர் மந்திரியை வேண்டினர். மந்திரி தலைவரை இது சம்பந்தமாக ஒரு மனு அனுப்பும்படி தெரிவித்திருக்கின்றார்.

### ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ரூபா 750,000

அகில இலங்கைப் பட்டின சபைகளின் சங்கம் யுத்தகால உபகாரச்சம்பளஞ் சம்பந்தமாக ஸ்தலஸ்தாபனத் தலைவருக்கு ஒரு மனு அனுப்பியது. இதுவிஷயம் ஸ்தலஸ்தாபன மந்திரியின் கவனத்தை இழுத்திருக்கின்றது. எனவே, பட்டின சபைகளில் வேலைபார்ப்பவர்களுக்கு உபகாரச் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. இதற்காக ரூபா 750,000 அரசாங்கசபை ஒதுக்கியிருக்கின்றது.

---

### பொதுஜன பாதுகாப்புப் பகுதி தேசீய உணவு உற்பத்தி இயக்கம்

### சுலோகப்போட்டி முடிவுகள்

கீழ்க்காணும் சுலோகங்களே சிறந்தவையென்று மேற்படி போட்டியில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சுலோகத்துக்கும் ரூபா 10 சன்மானம் வழங்கப்பட்டிருக்கிறது.

'அ' பிரிவு:-

1. புல்லைஅழித்து நெல்லை விதை— கே. ஆறுமுகம், சுருட்டுக்கடை, மொருந்தோட்டை, உந்துக்கொடை.

2. கமத்தொழிலாற்றிக் கிராப்போம் நாட்டை — கே. பொன்னையா, கட்டுக்கொல்லை, அரசினர் தமிழ்ப்பாடசாலை, கண்டி.

3. பெண்பாலாரும் பெரும்பயிர் செய்யலாம். ஏ. எல். மொக்மூத்பலீல், ஆசிரியர், G/மஹாரஸ் சுல்தியாபாடசாலை, காலி.

4. போர்க்களத் தொண்டின் ஏர்க்களம் நன்று—வி. செல்லப்பா, ஆசிரியர், இந்து தமிழ்ப்பாடசாலை, கட்டுடை, மானிப்பாய்.

5. உரத்தையிட்டு நிலத்தை உழு— ஆர். குழந்தைவேலு, ஆசிரியர், சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை.

'ஆ' பிரிவு:-

1. அரசினர்க்களிக்கின் அவர் பகிர்ந்தளிப்பர்—பண்டிதர் எஸ். காசிப்பிள்ளை, ஆசிரியர், அன்று துவிபாஷா பாடசாலை, அட்டபாகை, கம்பளை.

2. இல்லார்க்கீய நல்லாய்ப் பயிர் செய்—வி. செல்லப்பா, ஆசிரியர், இந்து தமிழ்ப்பாடசாலை கட்டுடை, மானிப்பாய்.

பொதுஜனப் பாதுகாப்புப் பகுதியால் நடத்தப்பட்ட இப் போட்டியில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். இலங்கையின் எல்லாப் பகுதிகளிலுமிருந்து 266 பேர் சுலோகங்கள் அனுப்பியிருந்தனர்.

---

### தேகவியோகம்

#### டொக்டர் N. இராசையா

மூளாய் வாசரும், மலாய்நாட்டில் அரசாங்க வைத்தியப்பகுதியில் நீண்டகாலம் கடமையாற்றி உபகாரச் சம்பளம் பெற்று, மூளாய் ஐக்கிய சங்க வைத்தியசாலையில் சேவைபுரிந்தவரும், சமீபத்தில் தமது சொந்தப் பொறுப்பில் சுன்னுகத்தில் மருத்துவச்சாலை ஸ்தாபித்து வைத்தியஞ் செய்துவந்தவருமான டொக்டர் N. இராசையா அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை (31-3.44) இரவு காத்திராப்பிரகாரமாக ஏற்பட்டுள்ள இருதய நோயினல் சடுதிமரணத்துள்ளானர்.

இவரின் பிரிவால் துயருறும் இவரின் மனைவி, மக்கள் மற்றும் இனபந்துகட்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிலை

புகையிலைப் பயிர் செய்வோர்க்கு
ஓர் விசேஷ அறிவித்தல்

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக, எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளை வகைகளை விநியோகஞ் செய்பவர்களா யிருந்து வருகிருர்கள்

புகையிலைப் பயிர் செய்கைக்கு அவசியமான பசளைகளைப் பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

## C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை
உபயோகிப்பதாலேயே சிறந்த
செழிப்பையும் மிக உயர்ந்த
லாபத்தையும் பெறமுடியும்

விசேஷ ஆலோசனை இல
வசமாகக் கூறப்படும்.
எங்கள் விசேஷ விற்பனை
ஒழுங்குகளைப் பற்றிய விபரங்
களுக்கு உடனே எழுதவும்.

கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது — அங்கத்தவர்களின்
உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

## COLOMBO COMMERCIAL CO., LTD.

(Incorporated in Great Britain — Liability of Members is Limited)

(1925)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலிப்பேச்சு ::

★பாரதியாருடன் ஒரு புதிய யுகம் தமிழ் இலக்கியத்திலே தோன்றுகின்றது.

# தற்காலத் தமிழ்நூல் ஆசிரியர்கள்

## புதிய தமிழ் இலக்கியப் போக்கின் வேகம்

— சி. வைத்தியலிங்கம்

மலை உச்சியிலிருந்து ஓடிவந்து தேங்கிப்பாய்ந்து நீர்வீழ்ச்சியின்வேகங் கொண்டு மறுபடி தேங்கி நிற்கும் ஒரு ஆறுபோல், தமிழ்மொழியும் பூரண வளர்ச்சிபெற்றுப் பின்னர் க்ஷீணித்த நிலையிலிருந்தது புராணகாலத்தில். உண்மையிற் புராணகாலம் தமிழ்ப் பாஷையின் வீழ்ச்சிக் காலம் என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தப் புராணகாலத்தின் இறுதிக் காலத்தில் கார்விசும்பில் ஓடும் மின்னற் கொடி போற் தோன்றினர் சுப்பிரமணிய பாரதியார். பாரதியாரும் சங்ககால இலக்கிய இலக்கணங்களிலே பரிச்சயம் உள்ளவர். ஐம்பெருங் காவியங்களிலே ஊறிக்கிடந்தவர். ஒரு பெண்ணைக் காதலிக்கும் ஆவேசத்துடன் கம்பனைக் காதலித்தவர். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கு தந்த தமிழ்நாட்டையும் தமிழ்மொழிப் பண்பையும் நன்றாய் அறிந்தவர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய தமிழுடன் உறவாடி இருந்தவர். இந்தப் பண்பாட்டிலே வார்க்கப்பட்ட பாரதியார் — இதுதான் அதிசயம்— மற்ற ஆசிரியர்களைப் பின்பற்றாது தமிழ்இலக்கியப் பூஞ்சோலையின் புதிய ஒரு சாலையிலே கம்பீரமாய்ப் போய்க் கொண்டிருந்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் தோன்றிய தேசிய இயக்கம், சமுதாய உணர்ச்சி, ஒற்றுமை உணர்ச்சி முதலியன இத் தனிநடைக்குக் காரணமாயிருக்கலாம். காரணம் ஏதாயிருந்தாலென்ன, பாரதியார் தமிழுக்குப் புதுமை கொண்டுவந்தவர். புதிய வசனக் கட்டு, புதிய கவிதை, புதிய கருத்துக்கள், புதிய சம்பிரதாயங்கள். அவ்வளவுதான் இப்போது எங்களுக்கு வேண்டியது. அவருடன்தான் ஒரு புதிய யுகம் தமிழ் இலக்கியத்திலே தோன்றுகிறது.

● ● ●

இப்பொழுது, சென்ற இருபது முப்பது வருஷங்களாகத் தமிழ்மொழியில் ஒரு புதுமலர்ச்சி இருக்கிறதென்று சொல்கிறார்கள். இளம் எழுத்தாளர்கள் அனேகர் தமிழ் எழுதுகிறார்கள். இவர்கள் எல்லாம் பாரதியின் வழிவந்தவர்கள். பாரதியிடம் பிட்சை வாங்கியவர்கள் அனேகர். களவெடுத்தவர்கள் பலர். ஆவேசம் பெற்றவர்கள் சிலரே. இந்த ஆவேசம் பெற்றவர்களில் ஜீவந்தர்களாயிருக்கும் தமிழ்க் கவிகளில் தேசிக விநாயகம்பிள்ளையும் பாரதி தாசன் என்ற சுப்புரத்தினமும் குறிப்பிடவேண்டியவர்கள். கவிதைப் போக்கிலும் பரவத்திலும் பாரதியின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் திருவாங்கூரைச் சேர்ந்தவர். அவர் இயற்றியிருக்கும் பாடல்கள் சில வருஷங்களுக்கு முன் 'மலரும் மாலையும்' என்ற அழகிய பெயருடன் வெளிவந்திருக்கின்றன. பெரிய காவியம் என்று சொல்லக் கூடிய எதையும் இவர் இயற்றவில்லை என்பது உண்மைதான். என்றாலும் இவர் எழுதியிருக்கும். 'கருணைக் கடல்' 'பாரசீகக் கவியமுதம்' போன்ற பாட்டுக்கள் இவருக்குத் தற்காலக் கவிதை உலகில் ஒரு சிறந்த இடத்தைக் கொடுக்கக் கூடியவை. முக்கியமாக 'உமர் கையாம் பாடல்களி'ன் இசையும் கருத்துக்களும் தத்துவமும் பிள்ளையவர்களின் பாட்டுக்களில் நன்றாய்ப் பிரதிபலிக்கின்றன. ஒரு பாட்டு:

"புலர்ந்து விடியும் பொழுதினிலே
பொய்கைக் கரையாஞ் சோலையிலே
மலர்ந்து நல்ல மணம் வீசி
மகிழும் மலர்கள் ஆயிரமாம்
உலர்ந்து வாடிச் சேற்றினிலே



[கவி தேசிகவிநாயகம்பிள்ளை]

உதிரு மவையும் ஆயிரமாம்
கலந்த உலக வாழ்வைஇதில்
கண்ணுற் கண்டு தெளிவாயே"

இத்தொகுதியில் இன்னொன்று:

"வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசுந் தென்றற் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுமுண்டு
வையந் தருமிவ் வனமின்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ"

கவிதையை ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு இப்பாடல்கள் தெவிட்டாத இன்ப ஊற்றாய் இருக்கும்.

பிள்ளையவர்கள் அரசியல் சமூக சீர்திருத்தப் பிரசாரத்திற்காகவும் சில பாடல்கள் எழுதியிருக்கிறார். இப்பாடல்கள் இலக்கியச் சுவையிலும் கவிதைச் சுவையிலும் கொஞ்சம் குறைந்துதான் காணப்படுகின்றன.

இப்பொழுது உயிருடன் இருக்கும் கவிகளில் ஸ்ரீ பிள்ளையவர்களுக்கு நிகரான வேறொரு கவி இல்லையென்றே சொல்ல வேண்டும். ஒரு நல்ல கவிக்குரிய குணமும் நயமும், இன்பத்தை உண்டாக்கும் சக்தியும் செய்யுட்களின் கட்டும்—இவைதான் இவர்களின் சிறப்பு. இவருடன் சரிசமனாய் கவிச்செருக்குடன் வீற்றிருப்பதற்கு இந்நாளில் வேறொருவரும் இல்லாவிட்டாலும், பாரதி தாசன் என்ற சுப்புரத்தினத்தையும் மறந்துவிடக்கூடாது.

● ● ●

ஆவேசம் கொண்ட மன எழுச்சியைச் சித்திரமாக்குவதிலும், வார்த்தைகளைக் கொட்டும் வெறியிலும், வாழ்க்கையைச் சார்ந்த பல அம்சங்களையும் லட்சியங்களையும் கவிதைப் பொருளாக அமைத்துக்கொள்வதிலும் யுகாந்த கால அக்கினிபோன்ற அனல் தன்மையிலும் பாரதிதாசன் பிள்ளையவர்களை விஞ்சிவிட்டார். பாரதிதாசனுக்குப் பிறப்பிடம் புதுவை. கவி பாரதியாரின் நட்பையும் அபிமானத்தையும் பெற்றவர். 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற ஒரு பாடலை காவிய பாவத்தில் எழுதியிருக்கிறார். இவருடைய கவிதா சக்தியின் ஆவேசத்திற்கும் விறுவிறுப்புக்கும் இந்தப் பாட்டை உதாரணமாகக் கொள்ளலாம். ஆனால் கவிதையில் செம்மையான கட்டும், ஓசை இன்பமும் நடையழகும் இல்லை.

இவருடைய 'வீரத்தாய்', 'பத்திரிகை' 'பில்கணீயம்' என்ற சிறு பாட்டுக்களில் பாரதியாரைப் பின்பற்றி சுப்புரத்தினமும் கருத்துப்பான்மைக்கும், லட்சியப் பொலிவுக்கும் பிரதானம் கொடுத்து [illegible] இலக்கிய சுவைக்கும் [illegible] ஆண்டு வரும் ஏட்டுக் கற்பனைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

சுப்புரத்தினம் ஒரு அதீதமான புரட்சிப் புலவன். பழைய கட்டுப்பாடுகளும் சமுதாயத்தின் அடிப்படையான தத்துவங்களும் உடைபட்டு சமுதாயத்தில் அநீதிகள் நீங்கி, சுதந்திரம், சமத்துவம் முதலியன நிலவ வேண்டுமென்ற தீவிரமான கொள்கை உடையவர். ஆனால் இந்தப் பிரசார வேகத்திற்கும் தீப்பொறி பறக்கும் நடைக்கும் சுப்புரத்தினம் கலைச்செறிவையும், பாட்டின் மெருகையும், இன்னிசையையும் பலியாக்கி விட்டார் என்று கூடச் சில இடங்களில் தோன்றுகிறது. இவர் ஒரு கவிஞனோ அல்லது ஒரு அரசியல் புரட்சிக்காரனோ? என்றுகூட ஐயம் உண்டாய்விடுகிறது. அல்லாவிடில் வால்மீகி, கம்பன் போன்ற கவிச் சக்கரவர்த்திகளின் காவியத்துக்குப் பொருளாயமைந்த ராமாயண கதையை "ராமாயணம் என்ற நலிவுதரும் கதை பூமியிலிருப்பதை இப்போதே அறிகின்றேன்" என்று இவர் நையாண்டிபண்ணிப் பாடுவது ஏனோ? இவர் கவிஞனின் உள்ளத்தோடு ராமாயணத்தோடு உறவாடாமல், நச்சு மனப்பான்மையுடன் படித்து எதையோ கண்டு வெருண்டு விட்டார் என்றுதான் படுகிறது. பல அம்சங்களிலே பாரதியாருடன் போட்டியிடும் இப்புலவர் அரசியலில் இறங்காமல் ஒரு கவிஞனாகவே இருந்துவிடக்கூடாதா? ஏனென்றால் தமிழ்த்தாய் இவருடைய சேவையை இன்றும் வேண்டிநிற்கிறாள்.

● ● ●

இனி, வசன இலக்கியத்தில் நவீனம் என்ற துறையில்தான் தமிழ் பாஷையில் பல நூல்கள் வந்திருக்கின்றன. நாவல் என்பது மேல்நாட்டுச் சரக்கு. அங்கே அது நல்ல வளர்ச்சியைப் பெற்று உன்னதமான ஸ்தானத்தை அடைந்துளது. பிறநாட்டுப் பண்பில் வளர்ந்துவந்த இலக்கியத்தை நாம் எடுத்து அமைக்கும் பொழுது எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் நல்ல கலாருசியும் கற்பனைத் திறனும் விரிந்த அறிவும் மனித இயற்கையின் வேறுபட்ட தன்மைகளையும் அறிந்த ஆசிரியனுக்கு ஆங்கில மென்றாலென்ன தமிழ் என்றாலென்ன? இந்தத் தன்மைகள் கொண்ட நாவல் ஆசிரியர்கள் இன்னும் தமிழ்நாட்டில் பிறக்கவில்லை என்பதே எனது துணிபு. என்றாலும் உள்ளதுக்குள் வள்ளிசாய் எடுக்கப்போனால் கா. சி. வேங்கடரமணி அவர்கள் ஒருவரே நவீனத்துறையில் இறங்கியவர்களுள் ஒரு சிறிது வெற்றியடைந்திருக்கிறார். அவர் எழுதிய 'தேசபக்தன் கந்தன்', 'முருகன் ஓர் உழவன்' என்ற இரு நாவல்களையும் தமிழுலகம் நன்றாய் அறியவில்லை. இது துக்கமான காரியமே.

ஸ்ரீ. வேங்கடரமணி அவர்கள் கவிதைப் பண்பு நிறைந்தவர்கள். இந்தியா தேசத்தின் விமோசனத்துக்கு 'கிராமப் புனருத்தாரணம்' அவசியம் என்ற கொள்கை உடையவர். தேன் தோய்ந்த வாசகங்களை எழுதுவதில் நிகரில்லாதவர். காளிதாசனுக்கு நிகரான கற்பனசக்திபடைத்தவர். 'முருகன் ஓர் உழவன்' என்னும் நவீனம் ஒரு கிராமச் சித்திரம். கதை இயற்கை வளத்துடன் தமிழ் நாட்டின் கிராமத்திலே வளர்ந்து வேகம்பெற்று நுண்ணிய கலைப்பாங்குடன் செல்கிறது. கதையின் முக்கிய பாத்திரங்கள்—ஒரு உழவன், ஒரு கிளாக், ஒரு வக்கீல்—உயிரும் உணர்ச்சியும் கொண்ட பாத்திரங்கள். கதை நாடகத் தன்மை பெற்று உன்னதமான கவிதைப் பண்புடன் முடிவடைகிறது. 'தேசபக்தன் கந்தன்' தேசீயத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்நாவல், முருகனின் கதையின் உன்னத [illegible] அடையாவிட்டாலும், தமிழ் [illegible] என்ற பெயரால் வெளிவந்திருக்கும் ஏனைய நூல்களிலும் சிறந்து விளங்குகிறது.

'கல்கி' என்ற ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கா. சி. வேங்கடரமணியவர்களுக்கு எட்டாத பத்திரிகைப் பிரசாரத்தினால், நாவலாசிரியர் என்ற பெயர் பெற்றிருக்கிறார். அவர் எழுதியிருக்கும் 'கள்வனின் காதலி', 'பார்த்திபன் கனவு', முதலிய நாவல்கள் வெறும் உபகதைகள் மாதிரி. உயிரும் உணர்ச்சியுமற்ற கதைகள். பாத்திரங்களின் குணசித்திரம் வேகமாய் அமையவில்லை. ஆனால் ஒன்று மறுக்க முடியாது. கிருஷ்ணமூர்த்தியின் பாஷை நடையிலே ஓட்டம் இருக்கிறது. தெளிவு இருக்கிறது. கவிதைப் பண்பு கூடச் சில சமயங்களில் அவருடைய கர்வபாவமான நடையிலே தோன்றுகிறது. ஆனால் நாவல்களின் இலக்கணத்தைக் கவனியாமல், சாதாரண மக்களின் அபிமானத்தைக் கவர வேண்டி எழுதுவதால், 'classic' என்று ஆங்கிலத்தில் சொல்லும் தன்மையை அடையவில்லை. தமிழ் நாட்டிலே பத்திரிகை உலகில் கிருஷ்ணமூர்த்திக்கு நல்ல செல்வாக்கு உண்டு. ஆழ்ந்த சிக்கலான விஷயங்களை எளிய தமிழில் எழுதுவதற்கு கல்கிக்கு நிகரானவர் தமிழ்நாட்டில் இல்லையென்று சொல்லலாம். இலக்கிய ஆராய்ச்சி, விமர்சனம், தமிழிசை வளர்ச்சி, தமிழ்நாட்டுப் பற்று என்ற துறைகளில் தமிழ்நாடு இன்று ஒரு சிறிது விழிப்படைந்திருக்கிறதானால் அதற்கு உழைத்தவர்களில் கல்கியும் ஒருவர். சிறு கதைகளும் பல எழுதியிருக்கிறார்.

சிறுகதைகளும் தமிழ்ப் பாஷையில் ஏராளமாய் வந்திருக்கின்றன. சிறுகதை ஆசிரியர்களும் கணக்கிட முடியாத அவ்வளவு தொகையினர். இது தமிழ் நாடு செய்த பாக்கியமோ, துர்ப்பாக்கியமோ வென்பதை எதிர்காலஉலகம்தான் நிர்ணயிக்கவேண்டும்.

● ● ●

சிறு கதையும் மேல்நாட்டு இலக்கியத் தினுசுகளில் ஒன்று. கதைப் போக்குச் சுருக்கமாயிருக்கும். பாத்திரங்களும் இரண்டு அல்லது மூன்று. ஒரு ஓவியன் சித்திரக் கோல்கொண்டு எழுதும் ஒரு வளைவினால், அல்லது கோட்டால் படத்தில் கொண்டுவரும் பாவமும் உயிரும் — அவ்வளவு சக்தி சிறுகதை ஆசிரியனின் பேனாமுனைக்கு இருக்கவேண்டும். இலக்கியப் பாதைகளில் மிகவும் கஷ்டமானது இச் சிறுகதைப் பாதை.

ஆனால் தமிழ் நாட்டில் இளங்கன்று பயமறியாது என்ற முறையில் அனேகர் இப்பாதையில் இறங்கியிருக்கிறார்கள். ராஜாஜி, கல்கி, கு. ப. ராஜகோபாலன், சிதம்பரசுப்பிரமணியன், இலங்கையர்கோன், சிவபாதசுந்தரம், புதுமைப்பித்தன், குகப்பிரியை, சேல்லப்பா, பிச்சமூர்த்தி இப்படி எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் சிறு கதை இலக்கணத்தை அறிந்து ஆற்றலுடன் எழுதுகிறவர்கள் மிகச் சிலரே. கு. ப. ராஜகோபாலன், புதுமைப்பித்தன், பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியன், செல்லப்பா, சாவித்திரி அம்மாள் ஆகிய இவர்கள் இதில் ஓரளவு வெற்றி அடைந்திருக்கிறார்கள். எல்லோரிலும் தலைசிறந்து விளங்குபவர் கு. ப. ராஜகோபாலன் என்பதே எனது அபிப்பிராயம்.

ஸ்ரீ. ராஜகோபாலன் எழுதிய கதைகளுள் 'பாமதி, விடியுமா, மோகினி நிலை, புதிர்' என்ற கதைகள் உலகத்துச் சிறந்த கதைகளுள் இடம் பெறத்தக்க மாணிக்கங்கள். இவருடைய கதைகள், உணர்ச்சியையும் பாவத்தையும் நுட்பமான கலைச்சுவையுடன் தோற்றுவிக்கும் காட்சிகளடங்கிய சித்திரங்கள். ஏற்ற சந்தர்ப்பங்களில் வாசகர்களின் மனோதர்மத்துக்கு இடங்கொடுத்து அனுமானிக்க இடஞ்செய்துவிடுகிறார். உணர்ச்சியும் மனக்கிளர்ச்சியும் பொங்கி வளர்ந்து கொண்டே செல்கின்றன. கச்சிதமானமுறையில் உயர்ந்த கலைப்பண்புடன் சிறுகதைகளைப் புனைந்தவர் என்றமுறையில் இவருக்குத் தமிழ் இலக்கிய சரிதத்தில் ஓர் இடமுண்டு.

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம் :
சுபானுஸு பங்குனிமீ ௨௦ வ

## யுத்தம்

சென்ற வருடம் முதன்மந்திரியார் மிஸ்டர் சேர்ச்சில், தேசாளுமன்றத்தில் பேசியபோது 1944-ம் வருடத்துடன் மகாயுத்தம் முடிவடையுமென்று திட்டங்கட்டினுர். ஆனுல் சென்றவாரம் அவர் மேற்படி மன்றத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் எவ்வித காலவரையறையும் யுத்த விஷயத்தில் குறிப்பிட்டாரில்லை. தற்போதைய யுத்தப் போக்கினை நோக்குமிடத்து, ஐரோப்பாவில் ஜெர்மனியர்க்கு மாறுக நடக்கும் யுத்தம், என்று முடிவடையுமோ தெரியாது. அடுத்தபடியாக யப்பானியர் என்று தோற்கடிக்கப்படுவர் என்றும் கூறவியலாதிருக்கின்றது. இவ்விஷயங்களை யோசித்துப் பதில் கூறுமுன், புதிது புதிதாக எத்தனையோ சங்கடங்கள் தோற்றுகின்றன. ஜெர்மனியர் வீழ்ச்சியடைவது நிச்சயமாயினும், என்று, எப்படியெனக் கூறுவது இயலாதிருக்கின்றது.

ஐரோப்பாவில் ஜெர்மனியர்க்கு எதிராகச் சித்தியுடன் யுத்தஞ் செய்யும் பொறுப்பு ருஷியரையே பொறுத்ததாக விருக்கின்றது. கிழக்கே ருஷிய அரங்கத்தில் யுத்தம் நிகழ்வது போல், மேற்கே பிரான்ஸிலும், தெற்கே இத்தாலியிலும் நேசவல்லரசினர் யுத்தஞ் செய்து நிற்பின், இதுவரையில் ஜெர்மனியர் சரண்புகுந்திருப்பாரல்லவா? மூன்று வருடமாகத் தனியே நின்று ஜெர்மனியரை எதிர்த்து ருஷியர் போர் செய்வதென்றுல், எவ்வளவு பிரமாதமான வேலை. இப்படியாக யுத்தஞ் செய்யும் ருஷியர்க்கு, பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் எவ்வளவு கடமைப்பட்டுள்ளார். ருஷிய சைனியங்கள் எல்லையைத் தாண்டி ருமேனியாவுக்குள் புகுந்துவிட்டன. அந்நாட்டினைப் பாதுகாக்க வியலாது ஜெர்மனியர் பின்வாங்கின், அங்கே பெறும் 'பெற்ருேலு'க்கும் ஆபத்து வந்துவிடுமே.

இவ்வாறுக மிக்க நெருக்கடியாக யுத்தஞ் செய்யும் ருஷியர்க்கு ஆறுதலளிக்க, இரண்டாவது அரங்கத்தை பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் ஏன் இன்னும் அமைக்காதிருக்கின்றனரோ தெரியவில்லை. விமானங்களால் தாக்கி ஜெர்மனியில் பெரும் நட்டத்தைத் தாம் விளைவிப்பதும் பெரிய உதவியேயென பிரிட்டிஷார் கருதுகின்றனர். ஆனுல், இனிப் பொறுத்திருக்க வியலாது. எப்படியாவது இரண்டாவது அரங்கத்தை அமைத்தே தீரவேண்டும். எவ்வளவு நட்டமுஞ் சேதமும் வந்தாலும் பொருட்படுத்தாது இரண்டாவதுஅரங்கத்தை அமைத்தாற்ருன், ஜெர்மனியரின் வீழ்ச்சி விரைந்து கைகூடும். எப்படியாவது நடந்து தீரவேண்டிய இந்தப் படையெடுப்பினை நேசவல்லரசினர் பின்போடுவதன் நோக்கம் யாதோ?

கிழக்கே யப்பானியர் சும்மாவிருப்பதாகத் தெரியவில்லை. பஸிபிக்கில் யப்பானியர் பெருந் தோல்வியடைந்தாராயினும், புதிதாகப் படையெடுப்புகள் ஆரம்பிப்பதாகத் தோற்றுகின்றது. இந்தியாவின் வடகிழக்குக்கோடியிலுள்ள அஸாம் பிரதேசத்தில் யப்பானியர் புகுந்து ஆரவாரஞ் செய்கின்றனர். இந்தியாவைக் கைப்பற்றும் நோக்கம் இவர்க்கு உண்மையிலுள்ளதாவென்பது சந்தேகமாக விருக்கின்றது. அரக்கன் பிரதேசத்தில் பெருந் தோல்வியை அடைந்த யப்பானியர்க்கு இந்தியாவைப் படையெடுத்து வெல்வது என்பது கனவிலும் நிகழாத விஷயமாகும். என்றுலும், யப்பானியர் கைப்பற்றிய நாடுகளிலிருந்து அவர்களைத் துரத்துவதும் விரைவில் நடந்தேறுமென்று சொல்லவியலாது. இது கைகூடுவதற்கும் நீண்டகாலம் செல்லுமென்பதே முதன்மந்திரியாரின் அபிப்பிராயம். மிக்க ஆதிக்கம்பெற்ற கடற்படையை நேசவல்லரசினர் வைத்திருப்பது உண்மைதான். ஆனுல், பர்மா, மலாயா, சீயம், இந்தோசீனம் முதலிய நாடுகளைப் பாதுகாப்பதற்கு யப்பானியர்க்குச் சிறந்த கடற்படை தேவையில்லை. போதிய புகைரதப் பாதைகள் இவ்விடங்களிலிருக்கின்றன. ஆகவே, சிறிது சிறிதாக யப்பானியரின் ஆகாயப் பெலனை அழித்தொழித்துத்தான் மேற்படி நாடுகள் கைப்பற்றப்படவேண்டும்.

பல்வேறு அரங்கத்திலும் யுத்தநிலை எவ்வாறுயினும், வருங்காலத்தில் சமாதானம் எப்படி நிலைநாட்டப்படவிருக்கின்றதென்பதை முடிவு செய்தாற்ருன், யுத்தத்தில் சலந்து யுத்தஞ் செய்வோர் திருப்தியடைவர். பழைய முறையில் எல்லா நாடுகளும் ஆளப்படுமென்பதும், ஒரு நாட்டினர் இன்னொரு நாட்டினர்க்கு நிரந்தரமாக அடிமையாக இருப்பாரென்பதும் ஒரு போதாவது நடக்காத விஷயம். முதன்மந்திரி இவ்விஷயத்தைக் குறித்து விரைந்து முடிவுக்கு வரவேண்டும். யுத்தம் விரைவில் முடிவடைவதும், பின்னர் சமாதானம் நிலைபெறுவதும் இக்கொள்கையைப் பொறுத்ததேயாம். இங்கிலாந்தின் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்த, இந்தியாவை நிலைக்களனுகக் கொள்வதுதான் முதன்மந்திரியின் உள்ளக்கிடக்கை. இந்தியாவின் கைத்தொழிலை விருத்திசெய்ய இந்திய அரசினர் முயற்சி செய்யும்போது, மிஸ்டர் சேர்ச்சில் எண்ணம் சித்தியடைவது எப்படி? பிரிட்டிஷ் அரசினரின் நோக்கங்களும் கொள்கைகளும் முரணடைவதைக் கண்டு நாம் துயரடையவேண்டியதாகின்றது. ஆகையால், பிரிட்டிஷார் தமது உள்ளக்கிடக்கையை வெளியாகச் சொல்வதே வேண்டற்பாலது. அப்பொழுதுதான் யுத்தம் எதற்காக நடக்கின்றது என யாவரும் அறிந்து அதற்காகத் துணைபுரிய முன்வருவர்.

---

## விபரமான விசாரணை வேண்டும்

கந்தவாலா விசாரணை அறிக்கை வெளிவந்த காலந் தொடக்கம் இன்றுவரை இது சம்பந்தமாக நிகழ்ந்த எல்லாவித ஒழுங்கீனங்களையும் நீதிபதிகள் ஆராய்ந்து தீர்க்கமான முடிவுகளைக் காணுதல் மிக முக்கியமென்ற கிளர்ச்சி வலுப்பெற்றுவருகின்றது. குறித்தஒருஅதிகாரியின் குற்றங்களைக் கண்டுபிடித்துத் தகுந்த பரிகாரங் கொடுக்கும் நோக்கத்துடன் நிகழ்ந்த விசாரணையில், அதற்குச் சார்பாக வேறுயார் இருந்தார்கள் என்பதை அறிய முயற்சி செய்யப்பட்டதாக எங்களுக்குத் தோன்றவில்லை. வர்த்தகப் பிரதிநிதி மாத்திரம் உணவுப் பொருட்கள் வாங்கும்படி இந்தியாவுக்கு அனுப்பப்படவில்லை. நீர்ப்பாசனப் பகுதித் தலைவர் ஒருவரும் இது சம்பந்தமாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்ருர். இவ்வாறு கணக்குப் பரிசோதனைத் தலைவர் தெரிவித்திருக்கின்ருர். இப்படி விஷயங்களெல்லாம் ஒழுங்கற்ற முறையில் சிக்கிக்கொண்டபடியால், நீதிபதிகள் சேர்ந்த ஒரு சபை இந்தச் சங்கிலிக் கோர்வைகளை எல்லாம் அவிழ்த்து மர்மங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டியது அவசியமாகின்றது. பத்திரிகைகளும், பொதுசனங்களும் இவ்விஷயத்தில் விறுவிறுப்புக் காட்டியபோதிலும் அரசாங்கம் அவ்வளவு அக்கறை எடுப்பதாகத் தெரியவில்லை.

பல எலிகள் சேர்ந்து நடாத்திய திருவிளையாடல்கள் யாவும் பகிரங்கத்தில் வந்தாற்ருன், யார் யார் எவ்வித ஒழுங்கற்ற முறைகளுக்குக் காரணர்களாக இ[illegible] துக்குத் [illegible] ரைக் குற்றவாளியாகக் கண்டுபிடித்துவிட்டு, மற்ற விஷயங்களை ஆராயாமல் விடுவது நீதியல்ல. மறைமுகமாக எத்தனையோ விஷயங்கள் நிகழ்ந்திருக்கலாம். உணவுப் பொருட்கள் வாங்கும் விஷயமாக அநேக ஒழுங்கீனங்கள் நிகழ்கின்றனவென்ற செய்தி நாட்டிற் குடிகொண்டிருக்கின்றது. அரசாங்கமும் இதை நன்கறியும். அப்படியிருந்தும் இவ்விஷயத்தில் அசட்டையாக இருப்பது விரும்பத்தக்கதல்ல. மந்திரிச்சபை விபரமான ஒரு விசாரணையை விரும்பவில்லையென்றுல் எதற்காகத் தேசாதிபதி மௌனம் சாதிக்கவேண்டும்? நாட்டின் ஆட்சிமுறை கேவல நிலையை அடையுமுன்னர் ஏற்ற வழிவகைகளைக் கையாண்டு நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெறுவது அரசாங்கத்தின் முக்கிய கடமை.

## குறிப்புகள்

### எப்பொழுதோ ஆயிருக்கவேண்டும்!

ஸ்தல ஸ்தாபன மந்திரியாராகும் கௌரவ S. W. R. D. பண்டாரநாயக்கா அவர்கள், யாழ்ப்பாண நகரில் சென்ற வாரந் தங்கி, பட்டினசங்கம், கிராம சங்கங்கள் என்பவைகளில் ஏற்பட்டுள்ள குறைநிறைகளை விசாரித்து அறிந்தனர். அப்பொழுது அவர் கூறிய ஒரு விஷயத்தை நாம் பிரதானமாக எடுத்துரைக்கவேண்டியிருக்கின்றது. "யாழ்ப்பாண நகரில் இற்றைக்குப் பல்லாண்டுகட்கு முன்னரே நகரசங்கம் ஏற்பட்டிருக்கவேண்டும்" என்ற இவர் கூற்றின் உண்மையைப் பட்டினசங்க அங்கத்தவராவது, பட்டின வாசிகளாவது இன்னும் அறியாதது பெருந்துக்கமே. இற்றைக்கு இரண்டு வருடங்கட்கு முன், யாழ்ப்பாணப் பட்டின சங்கத்தை, நகரசங்கமாக மாற்றி அமைக்க, மேற்படி மந்திரியார் உடன்பட்டு மிக்க சாதகமாக முயற்சி கைக்கொண்டபோது, சில சுயநலப் புலிகள் எழுந்து எல்லாவற்றையும் கெடுத்துவிட்டனர். அறிவிற் குறைந்த பாமர சனங்கட்குப் பொய்ப் பிரசாரங்களால் அவநம்பிக்கையை உண்டாக்கி, நகர சங்கம் வேண்டாமென்று பொதுமக்கள் வாதாடும்படி செய்துவிட்டனர். இதனுல் மந்திரியார்க்காவது, இலங்கை அரசினர்க்காவது சிறிதாவது நட்டம் ஏற்பட்டதன்று. உள்ளபடி பெருநட்டத்தை அடைந்தவர் யாழ்ப்பாணப் பட்டின வாசிகளே. கொழும்பு, காலி, கண்டி முதலிய இடங்களில் நகரசங்கம் (Municipality) ஏற்பட்டு எண்பது வருடங்கட்கு மேலாகின்றது. யாழ்ப்பாணநகர் மேற்காட்டிய நகரங்களிலும் பார்க்க எவ்விஷயத்தில் குறைவுடையது? கல்வி முன்னேற்றத்திலா, சனத்தொகையிலா, நாகரிகத்திலா என்று கேட்கின்ரேம்? நகரசங்கம் ஏற்படின் எவ்வளவு நன்மைகளைப் பொதுமக்கள் அடைந்திருப்பர்? எப்பொழுதும் கீழ்நிலையில் இருக்கச் சனங்கள் விரும்பின், அதற்குத் தலைவர்கள் உடந்தையாவதா? சனங்களுக்கு அறிவையூட்டி அவர்கள் மேல்நிலையை அடையச் செய்வதன்ரே உண்மையான பொதுசனத் தொண்டு. இப்போதைய யாழ்ப்பாணப் பட்டின சங்கத்தினராவது இவ்விஷயம் கைகூடுவதற்கு வேண்டிய முயற்சிகளைக் கையாள்வாராக!

### பெருங் குறை!

இலங்கையிலுள்ள எத்தனையோ சிறிய பட்டினங்கள் போதிய ஜலவசதியில்லாமல் படும் கஷ்டங்கள் இம்மாத்திரமன்று. நகரப் பொதுமக்களின் ஆரோக்கியத்துக்குச் சுத்தமான ஜலம் எவ்வளவு அவசியமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? யாழ்ப்பாணப் பட்டினத்துக்குக் குழாய்மூலமாகத் தண்ணீர் வழங்கவேண்டுமெனக் கிளர்ச்சி ஏற்பட்டு நூறு வருடங்களாகின்றன. இன்னும் இவ்விஷயம் கைகூடாதது எவ்வளவு பெருங் குறை [illegible]மான நோய்கள் ஆரம்[illegible] நகரவாசிகள் ஆரோக்கியங் குன்றிப் பரிதாப நிலையை அடைந்துவருதற்கு, அசுத்தமான தண்ணீர் உபயோகிக்கப்படுவதே பிரதம காரணமாகும். இவ்விஷயம் பலமுறை எடுத்துக் காட்டபபட்டும் அரசினர் கவனித்தாரில்லை. இப்பொழுது சென்னை அரசினர், இவ்விஷயமாகக் கைக்கொண்ட திட்டத்தையாவது இலங்கை அரசினர் பின்பற்றக்கூடாதாவென்று கேட்கின்ரேம்? சென்னை மத்திய அரசினரே எல்லாச் சிறு பட்டினங்கட்கும் குழாய் மூலமாகச் ஜலம் வழங்க வசதிகள் செய்துகொடுக்கப் போகின்றனர். நகரசங்கங்கள், பட்டின சங்கங்கள் இச்செலவைப் பொறுக்கவேண்டியதில்லை. மத்திய அரசாங்கமே எல்லாப் பொறுப்பினையும் ஏற்கும். குழாய்கள் மூலம் நீர்நிலைகள் அமைத்து வேண்டிய வசதிகளை அளித்தபின் நகரசங்கங்களின் வசம் ஒப்புவிக்கப்படும். அப்படியாகவே, இலங்கை அரசினர் இந்தச் சீவாதாரமான முயற்சியைக் கைக்கொள்வாரா என்று கேட்கின்ரேம்? இதிலும் பார்க்கப் பெரிய தொண்டு அரசினர் செய்யக் கிடையாது. யாழ்ப்பாணப் பட்டினத்துக்குக் குழாய்மூலமாகச் ஜலம் வழங்க இடைக்கிடை ஆயத்தங்கள் செய்யப்பட்டனவாயினும், அது இன்னும் நிறைவேருதிருக்கின்றது. பதினுயிரம் ரூபா செலவுசெய்து கட்டடங்கள் அமைக்க நிலங்களும் யாழ்ப்பாணப் பட்டினசங்கத்தினர் வாங்கி விட்டுள்ளார். இன்னும் எத்தனை வருடங்கட்குப் பின் இவ்விஷயம் கைகூடுமோ தெரியவில்லை. இலங்கை மத்திய அரசினர் முயற்சிப்பட்டு ஓரளவுக்குப் பணஉதவியுஞ் செய்ய முற்பட்டாற்ருன், இந்த அரிய விஷயம் நிறைவேறும். இலங்கை அரசினர் சிறிது ஊக்கங்கொண்டு இப்பெருங் குறை நீங்க உதவி புரிவாராக.

### மோட்டார் அபாயங்கள் ஒன்ரு? இரண்டா?

யுத்தம் ஆரம்பித்த காலந் தொட்டுப் பலவித கஷ்டங்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இவைகளுடன், மோட்டாரால் ஏற்படும் அபாயங்களும் நாளாந்தரத்தில் அதிகரித்துவிட்டன. 'பெற்ரேல்' வழங்குவது மிகவுங் குறைக்கப்பட்ட பின்னர், மோட்டார் அபாயங்களும் குறையுமென்று எதிர்பார்த்தோம். அதற்கு மாருக, இவ்வபாயங்கள் பன்மடங்கு பெருகி வருகின்றனவென்றே கூறவேண்டும். இலங்கையின் பல பாகங்களிலும் நாளாந்தரத்தில் பல அபாயங்கள் நிகழ்ந்து வருவதைப் பத்திரிகை மூலமாக நாம் அறிகின்ரேம். இந்த அபாயங்கள் பெரும்பான்மையும் இராணுவப் பகுதியினரின் 'லொறி'களாற்ருன் நிகழ்கின்றன. இந்த 'லொறி'களைச் செலுத்தும் சாரதிகள் தெருவீதிகளாற் செல்லும் மற்றைய வண்டிகளையும், கால்நடையாகச் செல்வோரையும் துரும்பாகத்தானும் மதிக்கின்ருரில்லை. தெருவில் மற்றவர்கட்கு என்ன அலுவல் என்பது இவர்கள் எண்ணம்போலும். சென்ற இரண்டு நாட்களுள் மூன்று அபாயங்கள் யாழ்ப்பாணம் — காங்கேசன்துறைத் தெருவில் நிகழ்ந்திருக்கின்றன. வண்டியை இழுத்துச் சென்ற இரு மாடுகள் உயிர்துறந்தனவென்றும், சிலர் காயமடைந்தனரென்றும், வண்டிகள் பழுதடைந்தனவென்றும் அறிகின்ரேம். இவ்வித அபாயங்கள் நேராதிருக்க, இராணுவ அதிகாரிகள் நிச்சயம் நடவடிக்கை எடுக்கவேண்டாமா? இராணுவ மோட்டாரைச் செலுத்தும் பாக்கியத்தைப் பெற்றுவிட்டால், சாரதிகள் மற்றைய உயிர்களைத் துரும்பாக எண்ணுவது எவ்வளவு மடமைத்தனம். இச் சாரதிகள் வேகமாக மோட்டார்களைச் செலுத்துவதை நிற்பாட்டவேண்டும். இதில் ஈடுபட்ட அநேகர் மதுபானஞ் செய்பவர்களெனவும் அறிகின்ரேம். அப்படியாயின், இவர்களை இப் பதவிகளினின்றும் நீக்கிவிடவேண்டுமல்லவா? இராணுவ லொறிகள் மாத்திரமல்ல — சாதாரண மோட்டார் வண்டிகளும் சந்தர்ப்பங் காரணமாக அளவுகடந்து விரைவாகச் செலுத்தப்படுவதைக் காணலாம். சென்ற வெள்ளிக்கிழமை இரவு சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை ஓரத்தில் 'பாட்டைசாரி'

# 'நாவினுற் சுட்டவடு'

★

படிப்படியாக ஏறி ஒரு மாதிரி உச்சநிலையை அடைந்தவுடன் சிலர் தலைகால் தெரியாமல் நடந்து மறுபடியும் சறுக்கி வீழ்கின்றனர். வேறு சிலர் அந்த உயர்ந்த ஸ்தானத்தில் நின்றபடி தங்கள் குழந்தைப் பருவங்களை அடியோடு மறந்து அவற்றை முழுமூச்சாக எள்ளி நகையாடுவதுமுண்டு. இப்படி உலகத்தில் எத்தனையோ விபரீதப் போக்குகள்.

●

சமீபத்தில் எங்கள் வித்தியா கர்த்தர் திரு. பெரேரா அவர்கள் ஆசிரியர்களைப்பற்றிச் சில வார்த்தைகளைத் தங்கு தடையின்றி விளாசிவிட்டிருக்கின்றார். இந்தமாதிரி யெல்லாம் இலங்கை மண்ணில் உற்பத்தியான வித்தியாகர்த்தர்களுக்கும் பேசமுடியுமென்பதை திரு. பெரேரா காட்டியிருக்கின்றார்.

இவர் பத்து வருட காலமாகப் பள்ளிக்கூடங்களைத் தரிசித்த ஆசிரியர்களின் சேமலாபங்களை விசாரித்துக் கொண்டு இருந்தவர் பயிற்சி முறைகளிலும் படிப்பிக்கும் முறைகளிலும் புதுவழிகளைக் காட்டிக் கொண்டிருப்பவர். பின்னர் பதின்மூன்று வருஷங்கள் கொழும்பு ஆசிரியகலாசாலையில் 'மீனக் கெட்டு' ஆசிரியர்களுடன் பொழுது போக்கினவர். இவருடன் இழுபட்ட சில பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பள்ளிக்கூடங்களிற் செய்யும் அடாத்துகளுக்குக் கங்கு கரையில்லை. இப்படியெல்லாங் கல்வி விஷயங்களில் நன்றாக அடிபட்டுப் பெயர்வாங்கிய புலியை இருந்தாற்போலிருந்து ஒரு நாள் இலங்கை அரசாங்கம் வித்தியாகர்த்தரின் கதிரையிலே போய் உட்காரும்படி கட்டளை செய்தது. திரு. பெரேரா அக்கம்பக்கம் பாராமல் ஒரே மூச்சிற் போய்க் கதிரையில் குந்திக்கொண்டார். பலருக்கும் இது வெகு திருப்தி. ஏனென்றால் திரு. பெரேரா நல்லபிள்ளைப் பட்டத்தை ஏற்கனவே பெற்று விட்டபடியால்.

❋

ஆனால் சமீபத்தில் இந்த வித்தியா கர்த்தர் ஆசிரியர்களின் உள்ளங்களை புண்படுத்திவிட்டார் தனது வார்த்தைகளால். பொலிஸ் வேலை பார்ப்பவனுக்கும் ஆசிரியனுக்கும் ஒருவித வித்தியாசமுமில்லையென அவர் முடிவு கட்டிவிட்டார். வதுளை சென்ற வித்தியாகர்த்தருக்கு மூளை வெகு வேகமாகத் தொழில் செய்திருக்கின்றது. பொலிஸ் பகுதித் தலைவர் தமது பதவியை உதறித் தள்ளிவிட்டார். காலியாயிருக்கும் அந்த ஸ்தானத்தை வித்தியாகர்த்தர் அப்பிவிடுவார் என்ற பயம் அரசாங்கத்திற்கு ஏற்படுமாகில் அது ஞாதனமல்ல' பொலிஸ் தலைவர் ஹொலங் என்பவர் ஐம்பது ரூபா தொடக்கம் எண்பது ரூபா வரை ஒரு புதிய சம்பள விகிதத்தைப் பொலிஸ் பகுதிக்குள் புகுத்திவிட யோசிக்கின்றார். கல்வித்திட்டத்தின் புதிய ஏற்பாட்டின்படி பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு ரூபா 50 தொடக்கம் ரூபா 75 வரை தான் கிடைக்கும். இது மிகவும் சரி என்பதை உறுதிப்படுத்துவதற்காக வித்தியாகர்த்தர், "பொலிஸ்காரனிலும் பார்க்க, எதற்காக ஆசிரியனுக்கு அதிகமாகச் சம்பளங் கொடுக்கவேண்டுமென" அட்டகாசஞ்செய்திருக்கின்றார். அத்துடன் நின்றபாடில்லை. இன்னும் ஒருபடி ஏறியிருக்கின்றார். "அப்படியென்ன இந்த ஆசிரியர்கள் ஆகாயத்திலேயிருந்து ஒரேயடியாக இங்கு குதித்திருக்கின்றார்களா" என்று. இப்படியெல்லாம் திரு பெரேரா தொபுகடீர் என்று கீழே வீழ்ந்து மண் கவ்வுவார் என்று ஒருவரும் நினைத்திருக்கவில்லை.

❋

"நாட்டின் செல்வ நிலைக்குத் தக்கவாறு சம்பள விகிதங்களை ஒழுங்குசெய்வதுதான் எங்களுக்கு வேலை. ஒருவரின் திறமை அவர் பெறும் சம்பளத்திற் தங்கவில்லை" என்று வெகு அழகாகச் சமாதானங் கூறுகின்றார் உளநூல் வித்துவான்-பெரேரா. புதிய கல்வித்திட்டத்தின்படி ஆசிரிய கலாசாலை அதிபர் மாதம் ஒன்றுக்கு ரூபா 800 அப்பிக்கொள்ளப் போகின்றார். இதனால் அவர் திரு. பெரேராவிலும் பார்க்க மூளைப்பலத்திற் குறைந்தவர் என்ற கருத்தல்ல. திரு. பெரேரா அதிபராக இருந்த காலத்தில் ஆகக் கூடி ரூ. 1,250 தான் பிரதிமாதமும் அள்ளியிருக்கின்றார்.

❋

### இறக்கமும்.......ஏற்றமும்!

படிப்படியாக ஏறிய ஒருவரைப் பற்றிப்பேசும்போது உயர்ந்த ஸ்தானத்திலிருந்து வீழ்ந்து மீண்டு அதே இடத்தில் அமர்ந்து மகிழ்ந்த ஒருவரின் சங்கதி வெகு ஆனந்தத்தை யூட்டுகின்றது. ஒருகாலம் அரசாங்கசபைத் தலைவராகவிருந்த திரு. மொலமுரே அவர்களை உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் இப்போது பலாங்கொடைப் பிரதிநிதியாக விருக்கின்றார். கடந்த வெள்ளிக்கிழமை தலைவர் சேர் துரைசுவாமி அவர்கள் அவசரகாரணமாகச் சபையினின்றும் நீங்கவேண்டியிருந்தது. அன்று பதிற் தலைவரும் அங்கில்லை. நிர்வாக சபைகளின் பதிற் தலைவரும் வீட்டிலே காலை நீட்டிக்கொண்டிருந்து விட்டார். சபைமுதல்வரான திரு. சேனநாயகாவைத் தனது ஆசனத்திலே வந்திருக்கும்படி தலைவர் கேட்டார். முதல்வர் ஒரு பெரியமனுஷர். திரு. மொலமுரே என்பவரைத் திரும்பவும் ஒருமுறை தலைவரின் கதிரையில் இருத்தி அழகு பார்க்க விரும்பினார் சபை முதல்வர். "காலம் அவ்வளவு பிழையில்லை" என்று சொல்லிக்கொண்டு திரு. மொலமுரே தனது பழைய இடத்திற்போய் அமர்ந்துவிட்டார். அதில் இருந்தவண்ணம் அவர் தான் செய்த திடியாட்டங்களையெல்லாம் நினைத்தாரோ என்னவோ!

---

கடைத்தெருவில் — பொலிஸ்டேசனுக்குச் சமீபத்தில், ஒரு மோட்டார்வண்டியும் மாட்டு வண்டியும் மோதிக்கொண்டதால், வண்டி நொருங்கியது. மாடுகளில் ஒன்று உயிர்துறந்தது. வண்டியிலிருந்தோர் காயமடைந்தனர். காரில் இருந்தோர் கைப்பொருளுடன் மறைந்து விட்டனர். சாரதி மாத்திரம் பொலிஸ்டேசனில் காணப்பட்டாராம். ஆனால், இது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை கையாளப்பட்டதாக யாம் அறியவில்லை. இத்தகைய செயல்கள் வரவர அதிகரியாதிருக்க அபசினர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கின்றேம்.

---

★ நினைவிலிருக்கட்டும்!

அடுத்தவார
'ஈழகேசரி' யில்
— கம்பன் நினைவு இதழ் —
— இனிய கட்டுரைகள் —

---

# தற்காலத் தமிழ் நூல் ஆசிரியர்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் தமிழ்மொழிபெற்று வரும் மறுமலர்ச்சியில் இலங்கைத் தமிழ் மக்களும் ஒரு சிறிது மிக மிகச் சிறிய பங்குபற்றி யிருக்கிறார்கள். ஏதோ சிறு கதைகள், இலக்கிய ஆராய்ச்சிகள் எல்லாம் செய்துவருகிறார்கள். இவர்களுள் 'இலங்கையர் கோன்' என்ற சிவஞானசுந்தரத்தையும், சோ. சிவபாதசுந்தரமவர்களையும் குறிப்பிடவேண்டும். சிறுகதை புனைந்து பெயர் பெற்ற இலங்கையர் கோன் இப்பொழுது ஒற்றையங்க நாடகத்தில் இறங்கி அதில் சிறிது வெற்றியும் பெற்றுவருகிறார். சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் — அவருடைய வாழ்க்கையே ஒரு இலக்கியப் பிரயாணம் என்று சொல்லிவிடலாம். ஈழகேசரியின் ஆசிரியராய்ச் சிலகாலமிருந்து அந்தப் பத்திரிகைக்கு ஒரு செல்வாக்கை இந்தியாவிலும் ஈட்டிக் கொடுத்தவர் இவர். சிறுகதை, இலக்கிய ஆராய்ச்சி முதலியவைகளிலே மிகவும் ஈடுபட்டவர். நுண்ணிய அறிவுடனும், கலாசாரத்துடனும் எழுதிவரும் மிகச் சில ஆசிரியர்களுள் இவர் ஒருவர். இவர் எழுதியிருக்கும் மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் என்ற நூல் இன்னும் அச்சாகவில்லை. இது தமிழுக்குப் புதுமையான புஸ்தகம். தென்னிந்தியாவில் இவர் செய்த யாத்திரையின் வரலாற்றைக் கூறும் இந்நூல் மணிவாசகப் பெருமானின் கதையை நூலாகக்கொண்டு ஒரு பிரயாண மாலை போல் விளங்குகிறது.

● ● ●

இன்னொரு ஆசிரியர் கூட்டத்தைக் கவனியாமல் விடமுடியவில்லை. இவர்கள் ஜீவந்தராயிருந்தாலும், பாரதியாரின் இலக்கிய பரம்பரையைச் சேராதவர்கள். இவர்களுள் ஸ்ரீ. வேங்கடாசாமி நாட்டார், சுவாமி விபுலானந்தர், சுவாமி வேதாசலம், கல்யாணசுந்தர முதலியார், வையாபுரிப் பிள்ளை, ரா. ராகவையங்கார் முதலியோர் பெரிய தூண்கள். இவர்கள் தமிழ்ப் புதுமையான சிருஷ்டிகளைச் செய்யாவிட்டாலும் தமிழ்ப் பாஷையின் சொல்வளத்துக்கும், புஷ்டிக்கும் தொண்டாற்றிவருகிறார்கள். சுவாமி வேதாசலம் அவர்கள் நுண்ணிய மதி நுட்பமும், கற்பனு சக்தியும், வாய்ந்தவர். தமிழில் வேகத்துடனும் சொற்செருக்குடனும் பலநூல்கள் எழுதியிருக்கிறார். ஆனால் இவர் நெஞ்சில் எரிந்த ஜாதித்துவேஷ நெருப்பு இவருடைய நடுவு நிலைமையையும், கலாசாரத்தையும் எரித்துச் சாம்பலாக்கிவிட்டது. அதனால் நூல்களின் மதிப்பும் குறைந்து காணப்படுகின்றது. சமஸ்கிருத பாஷையிலிருந்து இவர் மொழி பெயர்த்துத்தந்த சாகுந்தல நாடகம் மூலத்துக்கு நேரான மொழி பெயர்ப்பு. ஆனால் தனித் தமிழில் எழுத முயன்று, உலகம் போற்றும் இந் நாடகத்தின் அழகையும் நயத்தையும் பன்மடங்கு குறைத்துவிட்டார். இக்கூட்டத்தார் தமிழ் மொழிக்குச் செய்துவரும் தொண்டை இப்பொழுது நம்மால் மதிக்கமுடியாது. அதை எதிர்காலத்துக்கு விட்டுவிடுவோம்.

● ● ●

எனவே, தற்காலத் தமிழ் நூல் ஆசிரியர்களில் சிறந்தவர்களாக ஐவரை எடுத்துக்கொண்டேன். தேசிய விநாயகம்பிள்ளை, பாரதிதாசன், வேங்கடரமணி, ரா. கிருஷ்ணமூர்த்தி, கு. ப. ராஜகோபாலன். வேறு பல ஆசிரியர்கள் இருந்தாலும் அவர்களுக்குத் தமிழ் இலக்கிய சரித்திரத்தில் இடமில்லை.

இலக்கியமென்றால் கவிதைகளுடனும் நவீனங்களுடனும், சிறுகதைகளுடனும், உரை நூல்களுடனும் முடிந்துவிடவில்லை. தமிழ்த்தாய் கலா வீதியில் செருக்குடன் தலைநிமிர்ந்து செல்வதற்கு தமிழில் இதிகாசங்கள் வளர வேண்டும். சரித்திர வரலாறுகள் வரவேண்டும். இலக்கிய ஆராய்ச்சி நூல்கள், தர்சன வியாக்கியானங்கள் இசைக்கலை, நாடகக்கலை நூல்கள் நாடகங்கள் ஏராளமாய்ப் பெருகவேண்டும். தமிழ் மக்களும், தமிழ் நூல் கர்த்தாக்களும் இவைகளை உணர்ந்துகொண்டால் நல்லது.

[கொழும்பு வானெலியில்
21-3-44-ல் பேசப்பட்டது]

---

## கொழும்புத் தமிழிசை இயக்கத்திற்கு ஆதரவும், தேசிகருக்கு வரவேற்பும்

தமிழிசை இயக்கத்திற்குக் கொழும்புத் தமிழ் மக்களும் ஆதாவளிக்கவேண்டுமென்னும் எண்ணங்கொண்ட ஸ்ரீமான், கனகரத்தினம் அவர்களின் முயற்சியால் வானெலி இசைமண்டலம், தமிழ் கழகமாகிய இரண்டு சங்கங்களின் சார்பில் 28-1-44 வெள்ளிக்கிழமையன்று வெள்ளவத்தைச் சைவ மங்கையர் கழக மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. பல பிரமுகர்கள் சமுகமளித்தார்கள். சிறந்த அறிவாளிகளின் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன. பிரபல நியாயதுரந்தாரும், தமிழ்க்கழகப் போஷகரும், சிறந்த தமிழ்க்கலையபிமானியுமாகிய ஸ்ரீமான் ந. நடராசா K. C. அவர்கள் தலைமை வகித்தார்கள். திருவாளர்கள் அ. சபாரத்தினம் (Deputy Chief Accountant, C. G. R) ச. அருணந்தி (Assistant Director of Education) A M. K. குமாரசாமி (Registrar, Ceylon University) வீ. கான் (வீரகேசரி ஆசிரியர்). பண்டிதை இ. பத்மசாமி அம்மையார், முதலியார் செ. சின்னத்தம்பி முதலிலோர் தமிழிசை இயக்கத்திற்கு ஆதரவளிக்கவேண்டுமென்று ஆர்வம் ததும்பப் பேசினார்கள்.

இப்போது தமிழ்நாட்டிலே இந்தச் சிறந்த இயக்கத்தை வீறுடன் நடத்திவரும் செட்டிநாட்டரசர், இராசகோபாலாச்சாரியார், சிதம்பரநாத முதலியார் கல்கி முதலிய பெரியார்களுக்கு நன்றியும் கூறப்பட்டது.

இந்தக் கூட்டத்திலே, தமிழிசை இயக்கத்தின் முன்னணித் தொண்டராகிய தண்டபாணி தேசிகாவர்களுக்குச் சிறந்த வரவேற்பும் அளிக்கப்பட்டது. தேசிகர் அவர்களைத் தமிழிசை வேழமென்றும், இந்தியத்தாய் இங்கு அனுப்பிய கலை தூதர் —அருமார்—என்றும் பலபடக் கற்பனை செய்து பாராட்டினார்கள். தமிழிசை புன்மைக்குழியில் வீழ்ந்திடாது, அதனைப் புனித நெறியில் பேணித்தழைக்கவைக்கும் பணபுடைத் தொண்டு தேசிகர்போன்ற இசைப்புலவர்கள் கடமையென்று எச்சரிப்பும் விண்ணப்பமும் செய்யப்பட்டன.

---

## புடவைக் கட்டுப்பாடு அறிவித்தல் இல. 28

புடவை வாங்க உத்தரவுச் சீட்டுகள் பெறுவதற்கு அனுப்பிய விண்ணப்பங்கள் சம்பந்தமாக புடவை உபயோகிப்பவர்கள் கவனிக்க வேண்டியவை.

1. சாரம், காற்சட்டை கோட்டு முதலிய உடுப்புத் தைப்பதற்குரிய துணி ஆதியவற்றை வாங்குவதற்கு உத்தரவுச் சீட்டுகள் தரும்படி கேட்கும் அநேக கடிதங்கள் புடவைகளை உபயோகிப்பவர்களிடமிருந்து நாள்தோறும் இக்கந்தோருக்குவந்துகொண்டிருக்கின்றன. புடவைகளை உபயோகிப்பவர்களுக்குத் தனித்தனியாக உத்தரவுச்சீட்டுகள் கொடுக்கப் படுவதில்லை. தாங்கள் வாடிக்கையாக வாங்கும் வியாபாரிகளிடம் புடவைகள் இருந்தால் தங்களுக்குத் தேவையானவற்றை அவர்களிடம் வாங்கவேண்டும்.

2. யுத்தநிலைமைகாரணமாக நெசவுச்சாலைகளுள்ள தேசங்களில் புடவைகள் மிகவும் குறைந்துவிட்டதனல் சலவைசெய்யப்பட்ட லோங்குளோத் (வெள்ளைப்புடவை) சாரங்கள், கம்பாயங்கள் முதலியன தற்போது இருப்பு மிகவும் குறைவாகவே யிருப்பதோடு கிட்டடியில் இந்தநிலைமைதிருந்தக்கூடியதாகவுமில்லை. ஆகவே புடவை உபயோகிப்பவர்கள் தங்களுக்கு இன்றியமையாது தேவைப்படும் ஆகக்குறைந்த அளவுக்குப் புடவைகளை வாங்குவதில் மிகவும் கட்டுப்பாடாகவிருப்பதோடு, இயன்றவரை சலவை செய்யாத புடவைகளை உபயோகிக்கவேண்டும். அல்லது வாங்காமலே சரிக்கட்ட முயலவேண்டும் என்று கூறவிரும்புகின்றேன்.

3. புடவைகள் வாங்கும் விஷயத்தில் மிகவும் செட்டாக நடந்துகொள்வதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். வீட்டிலுள்ள புடவைகளோடு சரிக்கட்டமுடியுமானல் புதிதாக வாங்குவதை விட்டுவிட வேண்டும்.

4. புடவைகள் வாங்க உத்தரவுச் சீட்டுகள் பெறுவதற்கு புடவை உபயோகிப்பவர்கள் அனுப்புங் கடிதங்களுக்குத் தனித்தனியாக மறுமொழியனுப்ப இயலாமைபற்றி விசனப்படுகின்றேம்,

எஸ். எச். வாடியா
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

1944-ம் ஸு மார்ச்சீ 27உ [1926]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறு கதை

# வெள்ளிப் பாதசரம்

—'இலங்கையர்கோன்'

தன் வீட்டிற்கு ஒரு அடுக்குப் பெட்டியும், தனக்கு ஒரு தையற் பெட்டியும் வாங்கவேண்டுமென்று நினைத்து வந்தவளுடைய உள்ளம் விம்மும்படி கோவில் வீதியெல்லாம் பெட்டிகளும் கடகங்களும் மலை மலையாகக் குவிந்திருந்தன. குஞ்சுப் பெட்டி, அடுக்குப்பெட்டி, தையல் பெட்டி, மூடல்பெட்டி, பின்னல்பெட்டி ......ஊ! எத்தனை வகை! அருகில் மாட்டை யவிழ்த்து அதன்வாயில் பொங்கிய நுரையை வழித்து அதன் மினுமினுக்கும் கரிய முதுகில் தேய்ப்பதில் கண்ணும்கருத்துமாக நின்ற தன் கணவனின் கையில் மெதுவாக நுள்ளி, "மாடு தன் பாட்டுக்கு நிக்கட்டும்—வாருங்கோ" என்று கெஞ்சினாள்.

அஸ்தமிக்கும் சூரியனின் கடைசிக் கிரணங்கள் பனைமரங்களின் தலைகளை இன்னுந் தடவிக்கொண்டிருந்தன. கிழக்கு அடிவானத்தில் சந்திரன் வெளுக்க ஆரம்பித்தான்.

அன்று வல்லிபுரக்கோவில் கடைசித் திருவிழா. "எவ்வளவு சனம் பாத்தியளே! இதுக்காலை எப்பிடிப் போறது" என்று கூறி நல்லம்மா தன் கணவன் அருகில் ஒதுங்கினாள். செல்லையா தோளில் கிடந்த சால்வையை எடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு, "பயப்பிடாமல் என்னோடை வா" என்று தன் மனைவியின் கையைப் பற்றினான்......

கோவில் வீதிகளிலும், கடைகளிலும் காணப்பட்டதெல்லாம் நல்லம்மாவின் மனதில் ஒரு குதூகலத்தை உண்டாக்கின. வாய் ஓயாது தன் கணவனுக்கு ஏதோ சொல்லிக்கொண்டு சென்றாள். ஐந்து வயதுச் சிறுமியைப் போல், முழங்கால்கள் தெரியும்படி, தன் ஆடையைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு வீதியைச்சுற்றி ஒரு "கெந்தல்" போடவேண்டும்போல அவளுக்குத் தோன்றியது......செல்லையா மௌனமாக, தன் மனைவியின் குதூகலத்தில் மெய்மறந்து, அவள் இழுத்த வழி எல்லாம் போய்க்கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்தின் நீர்வளமற்ற சொற்ப நிலத்தைத் தம் தளராத முயற்சி ஒன்றினாலேயே வளம்படுத்தி, சீவியம் நடத்தும் புதல்வர்களில் அவன் ஒருவன். இரக்கமற்ற பூமியுடன் தினசரி நடத்தும் போரினால் அவனுடைய தசைநார்கள் முறுக்கடைந்து வச்சிரம்போல் இருந்தன. மன ஒருமைப்பாட்டினால் வாய் மௌனமாக இருந்தது.

மூன்று மாதங்களுக்கு முன்னர்தான் அவன் தனக்கு ஒரு வாழ்க்கைத் துணைவியைத் தேடிக்கொண்டான். அவளுடைய கலகலத்த வாயும், விடை இல்லாத ஒரு கேள்வியைக் கேட்பதுபோல் அவனுடைய பார்வையை முறித்து நோக்கும் அவளுடைய விழிகளும், மார்பின் பாரம் தாங்கமாட்டாதது போல் ஒசியும் நூல் இடையும், நிர்மலமாக இருந்த அவனுடைய தனிமை வாழ்வில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கின. சதா மண்ணைக் கிண்டுபவனுக்கு மண்ணிற்குள் எத்தனையோ ரகஸ்யங்களும், மணங்களும் புதுமைகளும் மறைந்திருக்கும்; ஆனால் அவைகளைவிட மேலான ரகஸ்யங்களும், மணங்களும் புதுமைகளும் வாழ்க்கையில் எத்தனை மறைந்து கிடக்கின்றன! ஓ வாழ்வு எவ்வளவு அற்புதமானது! செல்லையா இன்று அணிந்திருக்கும் நாற்பது ரூபா பெறுமதி உள்ள மாறுகரைச் சால்வையை விட இதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

கோவிலிலுள்ள சனங்கள் தங்கள் இஷ்டப்படி கூக்குரல் இட்டுக்கொண்டிருந்தனர். மூலைகளில் கிடத்தப்பட்டிருந்த கைக்குழந்தைகள் அழுதன. பஞ்சாகச்சம் அணிந்த பூசகர்கள் அங்கும் இங்கும் ஓடினர். இந்த ஆரவாரங்களுக்கிடையில் கர்ப்பக்கிருகத்தில் மணிச் சத்தம் கேட்டது. கூப்பிய கைகள் தலைகளுக்குமேல் உயர்ந்தன.........செல்லையா ஒரு தூணருகே கைகளைக் கட்டியபடி சனங்களின் தலைகளைப் பார்த்துக்கொண்டு நின்றான். நல்லம்மா அவனருகில் கைகூப்பியபடி மூலஸ்தானத்தை ஒருதரம் பார்ப்பதற்காக அங்கும் இங்கும் தலையை அசைத்தாள். .........எங்கோ தொலைவில் இருளில் சில தீபங்கள் மின்னின. அவைகளின் அருகில் ஒரு தொந்தி பெருத்த பூசகரின் கரும்பட உருவம் கைகளை அசைத்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. அதற்குப் பின்னால் — அதுதானே வல்லிபுரப் பெருமாள்?


திருமண் பிரசாதம் பெறுவதற்கு ஆரவாரப்பட்ட சனங்கள், ஒருபக்கத்தில் மேளச்சமா ஆரம்பமாகவே அவ்விடம் நோக்கி நகர்ந்தனர்.

செல்லையாவும் நல்லம்மாவும் கோயிலை வலம்வந்து வணங்கினர்.

தவில்காரன் தாளவரிசைகளை மெய்மறந்து பொழிந்துகொண்டிருந்தான். அவனுடைய குடுமி யவிழ்ந்த தலையோடு வேறும் ஆயிரம் தலைகள் அசைந்தன. நல்லம்மாவுக்குச் சிரிப்பாக விருந்தது. தன் கணவனின் உடலோடு தன் உடலை உராய்ந்துகொண்டு "எல்லோருக்கும் பைத்தியம் பாருங்கோ" என்றாள். மௌனியான செல்லையா மௌனம் கலைந்து, "போதும் இனி வாணை வெளியாலை போவம்" என்றான்.

பைத்தியம்! தொந்தி பெருத்த பூசகரின் கரும்பட உருவத்திற்குப் பின்னால் மறைந்திருந்து அறிதுயில் கொள்ளும் அந்த வல்லிபுரப் பெருமாளுக்குமா பைத்தியம்?

(தொடரும்)

- உடுப்புப் பெட்டிகள்
- கம்பளங்கள், விரிப்புப் பாய்கள்
- தும்புப் பாய்கள், துடைப்புகள், கயிறுகள்
- பூச்சு மை, வார்ணிஷ், எண்ணெய் முதலியன
- கட்டிடத் தேவைக்கான இரும்பு, உருக்குச் சாமான்கள்
- விவசாயத்துக்குரிய ஆயுதங்களும், உபகரணங்களும்
- சைக்கிள் 'பேல்', 'ஸ்ரான்ட்' etc.
- யந்திர எண்ணெய் முதலியன

சகாயமான விலைக்கு

கீழ்க்காணும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்

தி ஸிலோன் ஹார்ட்வெயர் ஸ்ரோர்ஸ்

ஆஸ்பத்திரி ரோட் : : : யாழ்ப்பாணம்

(1896) ரெலிபோன் இல. 62


# புடவைக் கட்டுப்பாடு

## அறிவித்தல் இல. 29

உள்ளூர்த் தொழிற்சாலைகள் நெசவுசெய்யும் துணிகளையும் இறக்குமதி செய்யப்படும் சில புடவைகளையும் ஐக்கிய மொத்த வியாபார தலைமைப் பண்டகசாலைக்குக் கொடுத்தல்.

### வியாபாரிகளுக்கும் பொதுசனங்களுக்கும் அறிவித்தல்

1. வெள்ளவத்தை நெசவுச்சாலையில் நெசவு செய்யப்பட்ட சாரங்களும் சேலைகளும் கம்பாயங்களும் வேஷ்டிகளும் வெளியூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதே வகையான தினிசுகளும் சில்லறைக் கடைகளில் கட்டுப்பாட்டு விலைக்குப் பெறமுடியவில்லையென அநேக முறைப்பாடுகள் சனங்களிடமிருந்து வந்திருக்கின்றபடியாலும், லைசென்ஸ் பத்திரம் பெறுதவர்கள், புடவைகள் உபயோகிப்பவர்கள் என்ற சாட்டுப் போக்கில், இந்தப் புடவைகளை வாங்கி பிற்பாடு கள்ளமாக விற்கின்றார்களாதலாலும், பின்வரும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன :—

(a) வெள்ளவத்தை நெசவுச்சாலையில் நெசவு செய்யப்படும் துணிகளுள் எவ்வளவையாவது உத்தரவு பெற்ற தனது ஏஜன்ற்மாருக்கு விற்பதை அந்நெசவுச்சாலை உடனே நிறுத்திவிடவேண்டும். இதற்குப் பதிலாக வேறு அறிவித்தல் கிடைக்கும்வரை, அந்தச்சாலையில் நெசவுசெய்யப்படும் சகலவகைப் புடவைகளிலும் காலத்துக்குக்காலம் கொடுக்கப்படும் எமது கட்டளைப்படி குறிக்கப்பட்ட அளவினை, உபயோகிப்பவர்களுக்கு விநியோகஞ் செய்வதற்காக, ஐக்கியமொத்த வியாபார தலைமைப் பண்டகசாலைக்கு விற்கவேண்டும்.

(b) ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இனிமேல் இறக்குமதி செய்யப்படும் சேலைகள், சாரங்கள், கம்பாயங்கள், வேஷ்டிகள் என்னுமிவற்றில் குறித்ததொருவீதம், பெரிய மொத்த விலைப்படி ஐக்கிய மொத்த வியாபார தலைமைப் பண்டகசாலைக்கு அனுப்பப்படும். தற்போதைக்கு வரவழைப்பவர்கள் விரும்பி ஒத்துக்கொண்டபடி இது விடப்படும். பின்னர் புடவைக் கட்டுப்பாட்டு விதிகளைத் திருத்தும் பிரமாணமூலமாக குறித்த புடவைகளை வரவழைப்போர் சகலருக்கும் பொதுவான அல்லது விசேஷ கட்டளை பிறப்பித்துச் செய்யப்படும். அநேக புடவைகளை வரவழைப்போருள் இருவர் தங்களுக்குக் கிட்டடியில் வந்த புடவைகளில் நூற்றுக்கு நாற்பதுவீதம் ஐக்கிய மொத்த வியாபார தலைமைப் பண்டகசாலைக்குக் கொடுக்க ஏற்கனவே சம்மதித்துள்ளார்கள்.

(c) ஐக்கிய மொத்த வியாபார தலைமைப் பண்டகசாலை தனது மொத்த வியாபாரக் கிளைப் பண்டகசாலைகள்மூலம் பதிவுசெய்யப்பட்ட ஐக்கிய சங்கங்களுக்குரிய தேவைப்படி, உள்ளூரில் செய்யப்பட்டனவும் வெளியூரிலிருந்து வரவழைக்கப்பட்டனவுமாகிய இவ்விருவகையிலுமுள்ள சேலைகளையும், சாரங்களையும், கம்பாயங்களையும், வேஷ்டிகளையும், இன்னும் தலைமைப்பண்டகசாலை விநியோகஞ் செய்வதற்கு ஒழுங்குசெய்த நெசவுசாலையில் நெசவு செய்யப்படும் சகல இதர புடவைகளையும் அச்சங்கங்களுக்கு அனுப்பிவைக்கும்.

(d) ஐக்கிய மொத்த வியாபாரத் தலைமைப் பண்டகசாலைக்குக் கிடைத்துள்ள புடவைகள் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு ஐக்கிய சங்கத்துக்கும் பங்கிட்டுக் கொடுக்க இன்னும் அநேக வாரங்களுக்குப் போதியளவில்லை. ஆகையால் இத்தகைய சங்கங்கள் மேற்சொல்லிய புடவைகளைப் பெறுவதற்கு அவசரப்பட்டுத் தலைமைப் பண்டகசாலைக்கு விண்ணப்பங்களை அனுப்பாதிருக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இலங்கையிலுள்ள ஒவ்வொரு சங்கத்துக்கும் பட்சபாதமற்ற முறையில் பங்கிட்டுக் கொடுப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதற்குச் சிறிதுகாலம் எடுக்கும். இப்புதிய ஒழுங்கினை ஆரம்பிக்கும்பொழுது மிகவுஞ் சில சங்கங்களுக்குமட்டுமே புடவைகளைத் தலைமைப் பண்டகசாலை அனுப்பமுடியும். புடவைகள் வந்து சேரச்சேர இத்தகைய சங்கங்களுக்கு மாறிமாறி முறையாக அனுப்பிவைக்கப்படும். எனவே சங்கங்கள் தலைமைப் பண்டகசாலைக்கு விண்ணப்பங்கள் அனுப்பித் தொல்லையுண்டாக்காதிருத்தல்வேண்டும்.

(e) குறித்த புடவைகளைப் பெறும் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு ஐக்கிய சங்கமும், புடவைகளை உபயோகிக்கும் அங்கத்தவர்களுக்கு அவற்றை விற்கும்பொழுது ஐக்கியசங்கப் பதிவு காரியஸ்தர் கொடுத்த கட்டளைக்கிணங்க, தமது புத்திக்கு நன்மையென்று காணும் முறையைப் பிரயோகித்து விற்றல்வேண்டும். அப்படிப்பட்ட விற்பனையும், விற்பனைத் [illegible] புத்தகத்துப் [illegible] அல்லது விதிக்கப்பட்ட அளவுக்கார்ட்டில் பதிவுசெய்து வைக்கப்படல்வேண்டும்.

(f) பதிவு செய்யப்பட்ட ஐக்கியசங்கத்தின் அங்கத்தவர்களாயும் புடவைகளை உபயோகிப்பவர்களாயுமுள்ளவர்கள் தங்கள் சங்கத்தில் புடவைகளை அவசரப்பட்டு வாங்கப்போகாதிருக்குமாறு கேட்கப்படுகின்றார்கள். இவர்களுடைய ஒத்துழைப்போடும் தயவு தாட்சணியத்தோடும், மாறிமாறி முறையாக விற்பனை செய்வதற்குரிய ஒழுங்கினைத் திருத்திகரமாக நிறைவேற்றலாம்.

(g) இச்சங்கங்களில் அங்கத்தவர்களல்லாதவர்களாயிருப்பவர்கள், புடவைகள் தேவைப்பட்டால் தாங்கள் வாடிக்கையாக வாங்கும் வியாபாரிகளிடமிருந்து வாங்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இருப்பில் வைத்திருக்கும் வியாபாரிகள் கட்டுப்பாட்டுவிலைப்படி விற்கமறுத்தால் தலைமைக்காரனிடம் அல்லது பொலிசாரிடம் அறிவிக்கலாம்,

(h) பதிவுசெய்யப்பட்ட ஐக்கிய சங்கங்கள் அப்படியான சகல புடவைகளையும் உபயோகிப்பவர்களாகப் பதிவுசெய்யப்பட்டவர்களிடம் இயன்றவரை குறைந்த விலைக்கே விற்கவேண்டும், ஐக்கிய மொத்த வியாபாரத் தலைமைப் பண்டகசாலை அல்லது மொத்த வியாபார கிளைப் பண்டகசாலை, ஐக்கிய சங்கங்களுக்குக் கணக்கிட்ட மொத்த விலையில் நூற்றுக்குப் பத்து வீதத்துக்கு மேற்பட லாபம் எவ்விதத்திலும் வைத்து விற்கக்கூடாது.

2. புடவைக் கட்டுப்பாட்டதிகாரி, 32-ம் விதியின் ஏற்பாட்டின்படி உத்தரவுபெற்ற ஏஜன்ற்மாரென சகலருக்கும் கொடுத்த அங்கீகாரம் வேறு அறிவித்தல் வெளிவரும்வரை நிறுத்தப்பட்டதென வெள்ளவத்தை நெசவுச்சாலை மொத்த வியாபார ஏஜன்ற்மாரும் சில்லறை வியாபார ஏஜன்ற்மாரும் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

3. பதிவுசெய்யப்பட்ட சில தோட்ட ஐக்கிய சங்கங்களும் வேறு சில ஐக்கிய சங்கங்களும் யுத்தத்துக்கு முன்னரே நெசவுச்சாலையின் வாடிக்கைக்காரர்களாகி, அச்சாலையிலிருந்து நேரே தங்களுக்குவேண்டிய புடவைகளை இதுவரையும் வாங்கிவந்திருந்தால், அச்சங்கங்கள் ஐக்கிய மொத்த வியாபார தலைமைப் பண்டகசாலையிலிருந்து தங்களுக்கு வேண்டிய புடவைகளைப் பெறுவதற்கு இனிமேல் ஒழுங்கு செய்யவேண்டும்.

4. பெரிய மொத்த வியாபாரிகளும், மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் தங்களுக்கிடையில் சரியான கட்டுப்பாட்டு விலைக்கு தங்கள் கையிருப்புச் சரக்குகளை விற்று, சில்லறை வியாபாரிகள் புடவை உபயோகிப்பவர்களுக்குச் சரியான கட்டுப்பாட்டு விலைக்கு விற்றுவர திரும்பவும் தீர்மானிப்பார்களானால், மேலே அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒழுங்குமுறை, புடவை உபயோகிப்பவர்களின் நன்மைகருதி திரும்பவும் ஆலோசிக்கப்படலாம்.

எஸ். ஏச். வாடியா
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி.

புடவைக்கட்டுப்பாட்டுக் காரியாலயம்.
106, ஹவொலக் ரோட்
ஹவொலக் ரவுண், கொழும்பு,
1944ம்ஞு மார்ச்மீ 27ந் தேதி.—[1927]

## அறிவித்தல்

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பகுதியில் உபஉணவுப்பொருட்கள்கோடுத்தல்

1944-ம்ஞு ஏப்ரில்மீ 3உ திங்கட்கிழமை முதல் ஏப்ரில்மீ 9உ வரைக்கும் ஐக்கியசங்கக் கடைகளல்லாத மற்றைய சில்லறை வியாபாரிகள்மூலம் அச்சில்லறை வியாபாரிகளிடம்பதிவுசெய்யப்பட்டஒவ்வொரு கூப்பன்காரருக்கும் பின்வரும் உப உணவுப் பொருட்களை விற்கும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

மல்லி 1 அவு. மஞ்சள் $\frac{1}{4}$ அவு.

சீரகம் அல்லது பெருஞ் சீரகம் அல்லது கடுகு $\frac{1}{4}$ அவு.

உழுந்து அல்லது கடலை $\frac{1}{4}$ அவு.

தங்களுக்குச் சேரவேண்டிய உப உணவுப் பொருட்களைக் கட்டுப்பாட்டு உணவுப் பொருட்களுடன் பெற்றுக்கொள்ளலாமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

E. B. Tisseverasinghe
வடமாகாணம் ஏஜண்டு துரை அவர்களுக்காக

யாழ்ப்பாணம், கச்சேரி
30-3-44.
[1929]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தக் கர்நாடகம்

● சாணு

விடியும் சமயம். மோகனமானது. அந்த வானத்தின் அழகு என் உள்ளத்தை மயக்கிவிட்டது. செந்நிறம் கலந்த வானில் இடையிடையே மிளிர்ந்த பொன்மயம் கண்களைப் பொறித்தட்டிற்று. கதிரவன் தனது முகத்தைப் பசுமை பொருந்திய வனத்திற்குப் பின்னால் மறைத்துக்கொண்டிருக்கிறான். கார்காலம். ஸ்நானம் செய்யலாமென்று தண்ணீரைத் தலையில் ஊற்றினேன். தலை விறைத்து அம்மிப்போய் விட்டது. மேலிலுள்ள மயிர்களெல்லாம் மேகத்தை நோக்கின. எங்கும் நிசப்தம். இப்படிப்பட்ட இயற்கை நிலையோடு, மனநிலையும் பொருந்திச் சாந்தமே குடிகொண்டிருந்த அந்த வேளையில், என் பாட்டியின் தும்மல், சிவபூசையில் காடி நுழைந்ததுபோல் இருந்தது.

*　*　*

பாவம். பாட்டிக்குத் தொய்வு. பரிதாபம். தும்மல், அடிதவறாமல் எண்ணிப் போட்ட தாளம் மாதிரித் தாளமிட்டது. இப்படியான ஸ்திதியை நான் பொறுமையுடன் அனுபவித்துக்கொண்டிருக்கும் சமயம், ஆந்தை ஆரம்பித்தது தன் அலறுதலை. அதிகாலையிலே ஆந்தை அலறுகின்றதே! அபசகுனம். இதை என் மனைவிக்குச் சொல்லலாமென்று படுக்கையறைக்குள் நுழைந்தால், என் மனையாளின் குறட்டைச் சத்தம் பாட்டியின் தும்மலுக்குச் சுருதி போட்டுக்கொண்டிருந்தது. பக்க வாத்திய சகிதமாக ஒரு கீர்த்தனம்பாடிப் பல்லவி ஸ்வரம் பாடினாலென்ன என்று யோசித்தேன்; கொடுத்து வைக்கவில்லை.

*　*　*

ஓரே கூச்சல். ஒப்பாரி. சகிக்கமுடியாமல் இருந்தது. யார் இறந்திருக்கலாம்? சரிதான் சகுனப்பலன் பிழைப்போகுமா? ஒருவேளை சன்னியாகக் கிடந்த சங்கரியோ! அல்லது அந்த கிழடு, கிட்டிணரோ! என்று பலவித சமுசயங்கள் என் மனத்தை மாய்த்துக்கொண்டு போயின. எப்படியென்றாலும் அடுத்த வீடல்லவா? முதலில் நிற்கவேண்டிய ஆட்களில் நானொருவனல்லவா! போகாமல் விடுவது தகுமா? இது முறையா? இது தர்மமாகுமா? மனுஷத்தன்மைக்காவது போயாகவேண்டும். போகாவிட்டால் எங்கள் வீட்டுச் சுகதுக்கங்களில் பங்குபற்ற அயலார் வருவார்களா? என்ன அநியாயம்! இப்போதானே ஸ்நானம் செய்தேன். சாப்பிடவேண்டாமா? அவச்சத்தம். சாப்பிட்டாலும் ஜீரணமாகாது. போகத்தான் வேண்டுமென்றால், திரும்பி வந்ததும் குளித்தாக வேண்டுமே. எனக்கும் சன்னி கண்டுவிட்டால்; ஐயோ!

*　*　*

கொட்டாவிச் சத்தம் கேட்டது. வரவு பாட்டு. சரிதான் அடுத்தபடியாக என் மனைவி மேடைமேற் தோற்றப் போகிறாள். நான் பின்னணியில் போக வேண்டியதுதான். கொல்லைப்பக்கமாகச் சுற்றி, வைக்கல் பட்டடைக்குப் பக்கத்திலிருக்கும் பொட்டுக்கூடாகப் புகுந்தேன். பூமியதிர்ந்தது. பூமாதேவி என்னை அப்படியே விழுங்கிவிடுவாள் போலிருந்தது. சீ! என் மனைவியல்லவா இவள். என்னை விழுங்கினால், அவள் விழுங்குவதற்கு யார் சம்பாதித்துப் போடப்போகிறார்கள்.

"இவ்வளவு நேரமாச்சுதே. போட்டடக்குராலுக்கு போவீர்களாவென்று பார்க்கத்தான் நானும் பொறுத்துக்கொண்டிருந்தேன். இரக்கமில்லாத மனுஷன். இப்படித்தானே எங்களுக்கும் ஒரு அவதியென்றால். போய்ப் பார்த்து வாருங்கள்" என்று சீறினாள் என் மனைவி

"காப்பி சாப்பிடவில்லையே. வெறும் வயிற்றோடே எப்படிப் போகிறது" என்று மன்றாட்டமாக "என் நீயும் வருகிறது தானே" என்றேன்.

"என்ன அவசரம் காப்பி சாப்பிட. அப்புறம் காப்பி சாப்பிடலாம், இப்பொழுது போங்கள். நான் பின்னாலேயே வந்துவிடுகிறேன். வெறும் வயிறு புகைகிறது. காப்பி சாப்பிட்டுவிட்டுவருகிறேன்" என்று குசினிப்பக்கமாகக் குலுக்கிநடந்தாள்.

*　*　*

அழுகைக்குரல் இருந்துவந்தவீட்டை நோக்கி ஓடினேன். வெளிமுற்றத்தில் முகாரி சப்பாணி கொட்டிக்கொண்டு, இராகம் பாடிக்கொண்டிருந்தது. நான் அங்கு நிற்பதே அதற்குத் தெரியவில்லை. செருமினேன் முகாரி என் முகத்தைப் பார்த்து "என்ன 'சாணு' சேதியென்ன"? என்று வினவிற்று. முகாரியை முடித்துவிடலாமென்று முடிவுகட்டினேன். பிறகு மற்றவர்களெல்லாரும் சேர்ந்து இராகமாலிகை அவதாரமெடுத்து என்னைக் கொலைசெய்தாலோ என்று பயந்து முன் யோசனையுடன் பின்வாங்கினேன்.

"என்ன முகாரி, இப்படியும் எங்களை ஏமாற்றலாமா?" என்றேன். "ஓஹோ! நீங்கள் மாத்திரம் எங்களை ஏமாற்றலாம். தேவையானபடிக்கெல்லாம் புரட்டிக் கிளறிக் குளப்பி அலங்கோலப்படுத்தலாம். நாங்கள் மாத்திரம் ஏதாவது தொடங்கினால், அதற்குப் பெயர் ஏமாற்றம்" என்று கண்ணீர் சொட்டிற்று. "இல்லை இல்லை அழாதே. நான் சும்மா கேலிக்குச் சொன்னேன். இதற்கெல்லாம் கோபிக்கலாமா?" என்று கேட்டேன். "எங்களுடன்தான் கேலி", என்று மறுபக்கம் திரும்பியது முகாரி.

"முகாரி முறைக்காதே; எங்கே! என் முகத்தைப்பார். என்ன நடந்தது? சொல்" என்றேன்.

*　*　*

"அதையேன் கேட்கிறாய். இராத்திரி ஒரு கெட்ட கனவு கண்டேன். எங்கள் வம்ஸத்தினருக்கு என்ன கேடுதான் நேரிடப் போகின்றதோ நான் அறியேன்.

'தசரத புத்திரா! நீதான் கெதி' என்று இராமனை நினைந்து தெலுங்கில் பாடிற்று. அதன் அர்த்தம் என்னவென்றால்: 'முந்திய நாட்களில் சாவீடென்றால், பெண்களெல்லாம் ஒன்றுகூடி, கிழமென்றாலென்ன குமரென்றாலென்ன, வியாகுலத்துடன் முறைதவறாமல் சாஸ்திரவிதிப்படி ஒப்பாரி சொல்வார்கள். அனுபவித்துப் பாடுவார்கள். விதவைகள் இழந்த கணவர்களை நினைந்துருகுவார்கள். முறைப்படி முகாரி பாடினால் முன்னோர்கள் நினைவு வரும். இப்போ என்னவென்றால் யார்தான் இறந்தபோதிலும் என்னைத் தேடுவார்களில்லை. வாயைத் திறக்காது மூக்கைச் சீறுவதுதான் தற்போதைய நாரியர்கள் நாகரிகம். மருந்திற்கும் அழமாட்டார்கள். அணுவளவும் அசையமாட்டார்கள். கல்நெஞ்சர் என்று கருதுவார்கள் கல்வியறிவில்லாதவர்கள். அப்படியல்ல. இராமனே! கோசலை மகனே! நாகரீக நாரீமணிகளின் மனத்தை மாற்றி என்னைக் கைவிடக் கூடாதென்று வற்புறுத்தி உபதேசித்தருளும்!' பாடிமுடிந்ததும் சோக மிகுதியினால் முகாரி மூர்ச்சையாகிவிட்டது.

*　*　*

தண்ணீர் கொண்டாவது அறிவு தெளியப்பண்ணலாமென்று நீலாம்பூரி வீட்டில் நுழைந்தேன் அது நித்திரையாயிருந்தது. பாவம். இரவெல்லாம் பத்துப்பன்னிரண்டு மணிவரை பிள்ளைகளுடன் கூடிக் கஷ்டப்பட்டு, ஒருபடி அவர்களைத் தூக்கத்திலமர்த்திவிட்டு, போஜனமுடித்து நித்திரை செய்தால், தூக்கம் வருமா? பின்பென்ன? பகலில் தூங்கவேண்டியதுதானே! தட்டியெழுப்பி நடந்தவற்றை விபரமாகக் கூறினேன். துள்ளியெழுந்து பக்கத்திலிருந்த செம்பு ஜலத்தையும் (எந்த நேரத்தில் குழந்தைகள் குழறுகிறார்களோ அந்த நேரத்தில் வாயலம்பி இராகம் பாடவேணுமே!) எடுத்துக்கொண்டு, முகாரி வீட்டை நோக்கி ஓட, நானும் பின்தொடர்ந்தேன். நாங்கள் போவதற்குள் முகாரி எழுந்திருந்து முகம் கழுவிக்கொண்டிருந்தது. சேமலாபம் விசாரித்து, தாம்பூலம் தரித்து, நடந்த எல்லாவற்றையும், ஒன்றும் மறையாமல் முகாரி கூற, நீலாம்பூரி இதுதான் தக்க சமயம் பக்கப்பாட்டுப் பாட என்று ஹிந்துஸ்தானியில் ஒரு பாட்டுப் போட்டது. அதன் சாராம்சம் பின்வருமாறு: 'பியாரி, என் காதலி, உன்னுடன் படுகிற பாடு போதும். என்னால் பொறுக்க முடியாது. இராநேரங்களில் போஜனமானதும் நீ உன் சிநேகிதர்களுடன் சீட்டாடிக்கொண்டிருக்கையில், உன் பிள்ளைகள் என்னைப் போட்டு வாட்டுகின்றன கத்திக் கத்தி என் தொண்டையில் காகாப்பு ஏற்படுகிறது. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? தொட்டிலில் விட்டால் உன் மூத்த சிறுக்கி, வைத்தூரித்தால் உன்னைப்போல் கால்கைகளை ஆட்டி நாட்டியமாடுகிறாள். நான் தமிழில் சொன்னால் அவர்களுக்குப் புரிகின்றதில்லை. காதலி! சுந்தரி! நான் ஒன்றுமாத்திரம் வேண்டுகின்றேன்: நான் இப்படியாக உன் பிள்ளைகளுடன் குட்டிக்காணம் போடும் நேரங்களில், நீ தோன்றி உன் உதடுகளைப் பிசைந்து, அவலப்பட்டு ஆங்கிலத்தில் ஏதோ அலட்ட பிள்ளைகள் எல்லாம் கண்மூடி மௌனியாகிறார்களே! பியாரி, உனக்குக் கண்கட்டு வித்தை தெரியுமோ? எனக்குக் கூறாய்!'

*　*　*

இப்படியாக நீலாம்பூரி தனது விருத்தாந்தத்தை வாய்விட்டலற, தோட்டத்திற்குப் போய்க்கொண்டிருந்த தோடி இடை வந்தது. நான் உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டெழுந்து தோடியை அமரச் சொன்னேன். தோடி புன்னகை புரிந்த வண்ணம், "'சாணு' வரவரக் கெட்டுப்போகின்றீர். உமக்கு எங்களைப்பற்றிக் கொஞ்சமாவது தெரியுமென்று நினைத்தேன். சுத்தமாக இருக்கவேண்டும். தமிழ்நாட்டிலே பிறந்த எங்களுக்கு ஏன் நாற்காலி? கலப்புக் கூடாது" என்று விளங்கச் சொல்லிற்று.

"அப்படியானால், சிலபேர்கள் கலப்பிருந்தால்தான் இனிமையாக விருக்குமென்று சொல்கிறார்களே. கலக்கிறதே ஒரு தனிச்சங்கதி யென்கிறார்களே" என்றேன்.

"மடையர்கள். இனிமை—இனிமை வேணுமென்றால் சர்க்கரையை நக்குகிறது தானே. முறை, விதி இவைகளை நாம் அனுஷ்டிக்கவேண்டும். அவைகளைக் கைவிட்டால் அதோகதிதான்" என்று அதிகார தோரணையில் தோடி கூறிக் கையில் இருந்த புல்லுக்கட்டைக் கீழே போட்டு அதன்மேல் உட்கார்ந்தது.

*　*　*

"பெரியார்கள் அப்படி நினைத்தால் ஏனிந்தப் பாடு? நாடகமே உலகம்" என்று ஒரு பரதேசியின் குரல் கேட்டது திரும்பிப் பார்த்தேன். தாடி மீசையுடன் கமாஸ் ஒரு பக்கத்தில் வந்து உட்கார்ந்து, "எப்போ பார்த்தாலும் என்னைத்தான் சாமா போட்டு சக்கை வாங்குகிறார். என்னால்தானே செறுகளத்தூர் சாமாவுக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்று சொன்னது.

"ஆமாம், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றுவாலாயம்" என்று முகாரி முணகிற்று.

"அந்தக்காலம் போச்சு. யாரைக் கேட்டாலும் எல்லாம் தெரியும் என்ற காலமாச்சு. நீங்களெல்லோரும் நன்றாக இன்னும் உலகில் அடிபடவில்லை. முசிரி தொடக்கம் சுப்புலட்சுமி வரை என்னைப் போட்டு உருட்டியிருக்கிறார்கள். அசைந்தேனா? சங்கீத விஷயத்தில் எனக்கனுபவமிருக்கிறது" என்று கூறி, உலகத்தில் நடமாடும் மாயாஜாலக் கள்ளரின் லீலா விநோதங்களை யசோதையின் பாதங்களில் சமர்ப்பிக்க எண்ணி "தாயே யசோதை யுந்தன்—" என்ற தமிழ்க் கீர்த்தனத்தை எங்களுக்குப் புரியாத பாஷையில் தோடி பாடிற்று. அதன் இலக்கணம்: 'இந்தியாவில் சங்கீத விஷயமாக ஏதாவது நடந்தால் சங்கீத வித்துவான்களே அதில் ஊக்கமெடுத்து, முன்னணியில் நின்று நடத்துவார்கள். சென்னையிலே சங்கீத விழாக்கள் நடக்கின்றன. 'மியூசிக் அக்கடெமி' நடக்கிறது. அவ்விழாக்களில் தலைமை வகிப்பதற்கு வித்வான்களே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஏன் வேவல் பிரபுவை வைத்தாலென்ன? எவ்வளவு பெரியார்? உலக அனுபவம் பெற்றவர் என்று நீங்கள் கேட்கக்கூடும். வெளியில் பேசாதீர்கள். வேவல் பிரபுவே வெடுக்கென்று சிரிப்பார்! தனக்குப் புரியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம். இவைகளைக் காத்தருளும் தாயே!' இதுதான் என்று பின்பு தென்பட்டது. "தோடி சொல்வது ரொம்பவும் சரி. தோடிக்கும் எனக்கும் அபிப்பிராயபேதம் அதிகமில்லை. சிலசில இடங்களில்மாத்திரம் இணங்கமாட்டோம். உலகமே இணங்கமாட்டோம் என்ற பிடிவாதத்துடன் இருக்கும்போது நாமென்ன செய்யலாம். எங்கள் வம்ஸத்தார் சிரிக்கக் கூடாது என்று ஏடுகளில் எழுதியிருக்கிறார்கள். ஆனால் எனக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வருகின்றது" என்று தெருவால் போன தன்யாசி தளுக்காகக் கூறியது.

*　*　*

'சிரிக்கிற இடம் இங்கேயல்ல. அது சினிமாக்கொட்டகை முதலிய இடங்களில். உலகத்தில் மனிதர்படுங் கஷ்டம் தெரிந்தால்தானே. சேர்ச்சில், ரூஸ்வெல்ற், சியாங்கைஷேக், ஸ்டாலின் முதலிய சிரேஷ்டர்கள் சுதந்திரத்திற்காக உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்யும் தறுவாயிலிருக்கையில் தன்யாசிக்குச் சிரிப்பு! "யாரங்கே? அடே! இவனைப் பிடித்து வெளியே தள்ளு" என்று உமாபரணம் உச்சஸ்தாயியில் ஒரு போடுபோட்டுத் திரும்பி ஏதோ யோசித்து, செஞ்சுருட்டியை நோக்கி "உமது அபிப்பிராயம் யாதோ?" என்று வினவிற்று. செஞ்சுருட்டி மேல்முழுவதும் பதற எழுந்து நின்று மூக்குநுனியில் இருந்த வியர்வையைப் பிறங்கையால் துடைத்துக்கொண்டு, "இலங்கையிலே ஒரு வித்வான் எவ்வளவு சங்கீதம்தான் அறிந்திருக்கட்டும், உதவாது. அந்தஸ்து வேணும். பதவி வேணும். அரசாங்க உத்தியோகம் வேணும். இளைப்பாறியாகியாவது இருக்கவேணும். அரசாங்கத்தில் எந்தப் பகுதியிலாவது ஒரு சிறு உத்தியோகம் இருந்துவிட்டால் போதும். ஏதாவது ஒரு சங்கீதசபைக்குத் தலைமை வகிக்கலாம், அல்லது காரியதரிசியாகலாம். நம்பிக்கையான பேச்சு. உலகப்போக்கே மாறிப்போச்சு தங்கமே தங்கம்" என்று கருத்துப்பட ஒரு தெம்மாங்கு பாடிற்று.

*　*　*

பரிவாரங்கள் புடைசூழ பந்துவராளி பிரசன்னமானார். "அதுமாத்திரமல்ல காலமும் மாறிப்போச்சு. சங்கீதமென்றால் சந்தையில்கூட வாங்கலாம் அவ்வளவு கேவலமாக இந்த நரமனுஷர் சங்கீதத்தை விற்றுண்ணுகிறார்கள். இரண்டே இரண்டு வாரங்களில், முற்பணம் வாங்கிக்கொண்டு, கலித்துறை, வெண்பா, அகவல் முதலியனவை சுத்தமான இராகத்தில் முறைப்படி பழக்கி, யோக்கியதா பத்திரமும் வழங்குகிறார்களாம். ஐயோ கலித்துறை, வெண்பா, அகவல்களுக்கு அட்டமத்துச்சனி அலைக்கப்போகிறான் போலும்" என்று பந்துவராளி கூறிமுடிக்குமுன் எல்லோரும் பெருமூச்செறிந்துகொண்டு நிலத்தில் சாய்ந்துவிட்டார்கள்.

*　*　*

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. இவர்களெல்லாம் இப்படியே மடிந்துவிட்டால்—, எங்கள் கலையெங்கே? பழக்க வழக்கங்கள் எங்கே? பழைய நாகரிகங்களெங்கே? எல்லாம் அழிந்துபோய்விடுமல்லவா? என்னால் தாமதிக்க முடியாமல் போய்விட்டது. அலறினேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். எழும்பிப் பார்த்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,36700

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

**பங்குப்பணங் கட்டுமுறை:**

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு:**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன்கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என். மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

(1918)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# Eelakesari
NATIONALIST TAMIL WEEKLY
Largest and most Influential Circulation in Ceylon & India.

Vol. 14 | Jaffna, Sunday April 2, 1944. | No. 36

தனிப்பாடற்றிரட்டு
1-ம் 2-ம் பாகங்கள்
புதிய அமைப்பு
3-ம் பாகம்-புதிய தொகுதி
வெளிவரும்
திருமகள் அழுத்தகம், சுன்னுகம்.

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

## சுத்தக் கர்நாடகம்

தேன்; என்னைச் சுற்றிவர நூற்றுக்கணக்கான ஜனங்கள் வட்டமிட்டுக்கொண்டிருந்தார்கள். மண்டையோடுகள், சர்ப்பம், கங்கை முதலியன கையிலேந்திச் சங்காபர்ணம் என்னைப் பார்த்துச் சிரித்தது. சாரங்கா, சுத்தபங்களா, காம்போதி, சுருட்டி, பியாகடை, இந்தோளம் முதலிய பெரியோர்களும், இன்னும் எனக்குத் தெரிந்தவர்களும், தெரியாதவர்களும் வந்திருந்தார்கள். என்னடா சங்கடம்! முகாரியைப் பார்க்கப்போய், இப்போது அவர்கள் குடும்பத்தோடே என்னைப்பார்க்க வந்திருக்கிறார்களே! என்ன ஆச்சரியம்! உலகப் பெரியார்கள் இதைக் கேட்டால்—இவர்களெல்லாம் 'சானு'வையா பார்க்கப் போனார்கள். சரி, இவர்களைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்று நினைத்து 'பியானோ'வைத் தட்டினாலும் தட்டுவார்கள் எங்களூரார்.

* * *

திருவாசகம் பாடிக்கேட்டது. மோஹனம் வருகின்றது என்று எல்லோர்க்கும் தெரிந்துவிட்டது. நாமெல்லோரும் மரியாதையாக எழுந்து வரவழைத்தோம். நான் மனதில் எண்ணியதை மோஹனம் எப்படியோ உணர்ந்து "'பியானோ'வைத் தட்டுவார்கள் என்று நினைத்தாயே. உலக அனுபவம் போதாது. மார்கழி நாட்களில் நான் உலகம் சுற்றி வருகிறேன். எனக்குத் தெரியும். 'பியானோ' தட்டத் தெரிந்தால், சீதனம் வேண்டாமென்கிறார்கள் மாப்பிள்ளைகள். பார்த்தார்கள் பெற்றார்கள், எண்ணாயிரம் லட்சம் என்று கொடுக்கிறதிலும் பார்க்க அறுநூறு ரூபாவுக்கு ஒரு பழைய பியானோப்பெட்டகத்தைவாங்கிக்கொடுத்துவிட்டால், சரியாகத்தட்டினாலென்ன பிழையாகத் தட்டினாலென்ன, நாசமாகப் போகட்டும் என்று எண்ணினார்கள்" என்று மோஹனம்பாட, சங்கும் சேமக்கலமும் சப்தித்து ஆமோதித்தன.

* * *

"நானும் சில வார்த்தைகள் கூற வேண்டும்; இல்லாவிட்டால் பத்தியப்படாது" என்று எதுகுல காம்போதி எழுந்துநின்று, மேலும் "ரேடியோக் கச்சேரிகள் நடக்கிறதே. அதற்குப் பாடகர்களை யார் தேர்ந்தெடுக்கிறார்கள்? யாராவது உண்மையில் விஷயம் விளங்கியவர்கள் இருக்கிறார்களா? அல்லது—என்று இராகம் இழுத்துப் பாடிற்று". "கடவுள் இவர்களை இதுக்கென்று தான் படைத்தாரோ என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது! ஸ்ரீராமா!" என்று ஸ்ரீராகம் முற்றுக்கூறிற்று.

* * *


கலகலவென்ற சத்தம் காதைத் துளைத்தது. வேலிகள் சரசரவென்று அசைந்தன. காற்சிலம்புகள் ஒலித்தன. யாரோ கட்டழகிகளின் கனைப்பு என் கவனத்தைக் கவர்ந்தது. வேலிக்குமேலால் எட்டிப் பார்த்தேன். கல்யாணி, கௌரிமனோஹரி, தேவகாந்தாரி, ஸ்ரீரஞ்சனி, கனகாங்கி முதலிய பெண்மணிகள் வெட்கித் தலைகுனிந்து நின்றார்கள். பெண்களல்லவா? சங்கோஜப் பிராணிகள். ஆண்கள் பேசிக்கொண்டிருக்கும் சமயம் எப்படித் தலைகாட்டுவது. ஆனபடியாற்றான் வேலிகளுக்குப் பின்னால் பதுங்கியிருந்து, நடந்தவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

* * *

"சுத்த அசடுகள். ஆண்களுக்கு முன்வர உங்களுக்கு உரிமையில்லையா? நாகரிகம் என்பது கொஞ்சமும் தெரிந்தால் தானே. சுத்தக் கர்நாடகங்கள்" என்று என்பக்கம் திரும்பி "குந்தினால்போல் ஓட்டிவிட்டதோ; எழும்புங்கள். கதையென்றால் போதும் காப்பியும் வேண்டாம்" என்று என் கையைப் பிடித்து இழுத்தாள் என் மனைவி.

* * *

திடுக்கிட்டெழுந்து கண்களைக் கசக்கினேன். என் மனைவி "எழும்புங்கள் கந்தோருக்குப் போகிறதில்லையோ? வைத்த காப்பியும் ஆறிவிட்டது. சீ! இதென்ன பழக்கம்? எட்டு மணிவரையும் தூங்குகிறது" என்று என் கால் விரல்களைப் பிடித்துக் கிள்ளிக்கொண்டிருந்தாள்.



பழுதடைந்தது! — அத்துடன்

# உமது பணமும் அழிந்தது!


அந்த உடையிலிருந்த அழுக்கை நன்றாய் வெளுத்துக் களைந்துவிட்டான்; அப்படியல்லவா? துரதிஷ்டவசமாய் அவ்வுடையினூடே ஒரு பொத்தலையும் உண்டாக்கிவிட்டான். அதிக சேதம்; அதிக ரூபாய்கள் வீணாக்கப்பட்டன.

உமது வீட்டில் சன்லைட்டின் பணச்செலவுச்சுருக்க முறையை அனுசரிக்க உறுதிகொள்வீராயின், கஷ்டப்பட்டு உழைத்த ரூபாய்களை மிச்சம் பிடிக்கலாம்.

உமது ஆடைகள் சுத்தமாயும், பார்வைக்குப் புதியதாயும் இருக்கும். சரியாக அழுக்குள்ள இடத்தில் சன்லைட் தேய்க்கப்பட்டால், எவ்விதமான சாதாரண அழுக்கும் சன்லைட்டின் அழுக்கு நீக்கும் அதிசய சக்தியின்முன் எதிர்நிற்கமாட்டாது.

பணச் சுருக்கமும் சுத்தம் தரக்கூடியதுமான சன்லைட்டின் "பணச்செலவுச் சுருக்க" முறையை உமது வீட்டில் பரீட்சித்துப் பாருங்கள்

உமது வீட்டில் சன்லைட்டின் "பணச்செலவுச் சுருக்க" முறையை ஆரம்பியுங்கள்.




S. [illegible] TM.

## ஸன்லைட்
## ஆடைகளைப் பாதுகாக்கின்றது.




LEVER BROTHERS (CEYLON) LIMITED

## விற்பனவு விளம்பரம்

இல. 977

கைதடி,
1. வீரகத்தி கந்தையா
2. பெண் மாரிமுத்து

சுளிபுரம்,
3. கதிரவேலு சின்னப்பிள்ளை
4. கதிரவேலு விசாலாட்சி

(3-ம் 4-ம் வழக்காளிகள் பராயமற்றவர்கள்.) இவர்களின் கிட்டிய உறவினர் 1-ம் 2-ம் வழக்காளிகள் என்ற முறையில் வழக்காளிகள்.

சுளிபுரம், இராசையர் சற்குரு காலஞ்சென்ற நன்னியர் வயிரமுத்துவின் மரணசாதனத் தத்துவவழக்கில் இல.1039ல் தத்துவகாரன் என்ற முறையில் எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 977-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1944-ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்)மாதம் 26-ந் திகதி புதன் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். [illegible]

தீர்வை [illegible] ரூபா 664-ம், இதில் ரூபா 400-க்கு 19-10-43 திகதி தொடக்கம் 23-11-43 திகதி வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூ. 126-79½ சதமும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுளிபுரமிறை "குருய் நின்ற கல்லடி" நிலைப்பரப்பு ஒன்பது (9) இதில் மேற்குப்புறமாய் நிலைப்பரப்பு ஐந் [illegible] மிகுதி கிழக்குப்புறமாய் நிலைப்பரப்பு நாலு (4) கொட்டிலும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு, ஒழுங்கையும், சின்னத்துரை மகள் மகேஸ்வரியின் ஆதனமும். வடக்கு சங்கரப்பிள்ளை பெண் பாறுபதிக்கும், சகோதரங்களுக்குமுரிய ஆதனம். மேற்கு, கந்தமுத்து பெண் நாகமாவினுடைய ஆதனம். தெற்கு, ஒழுங்கை. இதடங்கலும், இன்னும் மேற்செல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

Sinnathamby - Sangarappillai
சின்னத்தம்பி - சங்கரப்பிள்ளை
Commissioner and
Licensed Auctioneer.

தெல்லிப்பழை, 7-3-44

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலையம்" நா. பொன்னையா அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1944-ம் ஏப்பிரல் 2உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org